உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ௨௨.] ருதிரோற்காரி ௵ மாசி ௴ [பகுதி ௪.

Vol. XXII. February-March-1924. No. 4.

மேற்றிசைச்செல்வம்.

யவனபுரத்துக்கலைச்செல்வம்.

(செந்தமிழ் ௨௧-ஆம் தொகுதியின் ௫௦௭-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

20. ஹோர்மர் என்னும் மகாகவியியற்றியதும் யவனபுரத்துக் காவியங்களுள் முதல்வைத்து எண்ணப்படுவதுமாகிய இலியட் என்னும் தொடர்நிலைச்செய்யுளைப்பற்றிச் சில கூறுவாம். இலீயம் என்னும் நாட்டில் நடந்த பெரும் போரினை விரித்துக்கூறும் இந்நூலினை ஈலீய மகாகாவியம் என வழங்கலாகும். இலியநாட்டு அரசனாகிய பிரிய (Priam)மன்னனுடைய இளையமகன் பரீசன் (Paris)என்பவன் அழகே யோருருவெடுத்தாலனைய பெருநலம்வாய்ந்தவளும் யவனபுரத்து மன்னன் மேனிலாவன் (Menelans) உடைய மனையாட்டியுமாகிய எலேனா (Helena) வைக் கைப்பற்றித் தன்னூர்க்குக் கொண்டுசென்றான். அவளைச் சிறைமீட்குங்காரணமாக யவனபுரத்தார் இலியநாட்டின்மீது படையெடுத்துச்சென்றனர். ஆங்ஙனம் நிகழ்ந்த பெரும்போரின் ஒருபாகத்தைக் கூறும் நூல் ஈலீயமகாகாவியமாகும். உலீசமகாகாவியமும், ஏநேய மகாகாவியமும் இப்போரோடு தொடர்புற்றுநின்றவரலாறுகள்சிலவற்றை விரித்துக்கூறுவன. ஈலீயமகாகாவியம் தண்டியாசிரியர் பெருங்காப்பியத்திற்கு எடுத்தோதிய வனப்பு அனைத்தும் அமையப்பெற்றது; அகிலேசன் (Achilles) வஞ்சினமுரைத்தகாதை, அணிவகுப்புக்காதை, மேனிலாவபரீசர் தனியமர்புரிந்தகாதை, முதற்போர்க்காதை, தயமீதன் (Diomed) போர்த்திறமுரைத்தகாதை, விறல்வீரர்மூவர்திறனுரைத்த

காதை, ஏகதனும் (Hector) அஜனும் (Ajax) தனியமர்புரிந்தகாதை, இரண்டாம்போர்க்காதை, அகிலேசனைப் படைத்துணையழைத்தகாதை, தயமீதனும் உலிசனும் (Ulysses)நள்ளி நளிற் போர்புரிந்தகாதை, அகமன்னன் (Agamemnon)போர்த்திறமுரைக்கும் மூன்றும்போர்க்காதை, முழுமுதலாணங்கொண்ட உழிஞைவீரர்காதை, நான்காம்போர்க்காதை, மேகலேகாட்டித் தேவராஜனை வஞ்சித்தகாதை, அஜன்போர்த்திறமுரைக்கும் ஐந்தாம்போர்க்காதை, பத்திரோகலன்பட்ட ஆறும்போர்க்காதை, மேனிலாவன்போர்த்திறமுரைத்தஏழாம்போர்க்காதை, அகிலேசன்சோகமுரைத்தகாதை, அகிலேச அகமன்னர் நட்புக்கோட்காதை, அகிலேசன் போர்த்திறமுரைத்தகாதை, காமந்தாநதிதீரத்துப் போர்நிகழ்ந்தகாதை, ஏகதன்பட்டகாதை, பத்திரோகலனுக்குப் பாடலொடு ஆடல்கொண்டகாதை, பிரியமன்னன் புத்திரசோகக்காதை என்னும் இருபத்துநான்கு பரிச்சேதங்களால் நடப்பது. இக்காவியரத்தினத்தின் சிற்சிலபாகங்களைத் தமிழறிஞர்பொருட்டு மொழிபெயர்த்து வெளியிடக்கருத்துடையேன். நேரம்வாய்த்துழி அக்கடமையை நிறைவேற்றுவேன்.

21. ஹோமருடைய காலம் கலி 2057 என ஒரு சாராரும் கலி 2250 என மற்றொருசாராருங் கூறுவர். கலி 2300 வரையிலிருந்த ஹேசியோட் என்னும் பெரும்புலவர் "நாளும் வினையும்"எனப் பெயரிய நூலொன்று செய்தளித்தார்; இந்நூல் நமது மொழியிலுள்ள பதினெண்கீழ்க்கணக்கினையொத்த நடையினது. ஹோமர் இயற்றிய தனிப் பாசுரங்களும் பலவுள. இவையாவும் வீரச்சுவையும் இன்பச்சுவையும் செறிந்தன. ஹோமருடையகாலத்தில் யவனபுரம் முடியுடைவேந்தராலும் குறுநிலமன்னராலும் ஆளப்பட்டுவந்தது. மன்னரும் வள்ளல்களும் தமது முன்னோர்திறமையைப் பாணர் பாடக்கேட்டு மகிழ்வடைவார். தம்மையுந் தமது முன்னோரையும் பாடும் பாணருக்கு வேண்டுவன கொடுப்பார். இக்காரணத்தினாலே கவியென்னும் பயிர் நன்குவளர்ந்தோங்கியது. கவிஞர் தெய்வதருவினை நிகர்த்தாரேனும் வரையாது கொடுக்கும் வள்ளல்களாகிய மேகங்கள் பொன்மாரிபொழியாவிடின் மலர்ந்து நறுமணங்களுற்றுாது வாட்டமுற்றுச் சோர்வரென்பது வெளிப்படை. மகாகவியாகிய ஹோமர் உயிரோடிருந்தகாலத்தில் அவருடைய புகழ் விளங்கவில்லையெனக் கர்ணபரம்பரையா லறிகின்றோம். இம்மகாகவி பிறவிக்குருடர் என்பதும் ஒரு பரம்பரைக்கதை. இவர், யாழைக் கையி

லேந்திக்கொண்டு ஊர்தொறுஞ்சென்று அன்னத்துக்குத்தானும் அலை வுற்றாரெனவும் அறிகிறோம். இவர் தமது பெருங்காப்பியத்தையியற் றியகாலத்தில் யவனமொழி எழுதாமொழியாயிருந்தது. காப்பியம் செவிவாயிலாகவே பலநூற்றாண்டுகளுக்குள் யாண்டும் பரந்து நிலைபெற் றிருந்தது. இக்கவிச்சிரேஷ்டருடைய ஆற்றலைப் பிற்காலத்தாரே நன்கு அறிந்தனர்.

22. வீரகாவியங்களுக்குரிய யாப்பாகிய வீரப்பாவைப்பற்றி முன் னமே கூறினம். இதன்பின்னர், நமதுமொழியிலுள்ள கொச்சகவொரு போகின் நடையதாகிய "Elegiac" என்னும் ஒருவகைப்பாவும் நமது அகவற்பாவை ஒருபுடையொத்த நடையினதாகிய "Iambic" என்னும் ஒருவகைப்பாவும் தோன்றின. கொச்சகவொருபோகின் நடையினதாகிய யாப்புக்குவீரமும், காதலும், நீதிமொழியும் பொருளாக அமைந்தசெய் யுட்கள்உரியவாயின. கைபறுநிலை, மன்னைக்காஞ்சிபோன்றசெய்யுட்களும் இவ்யாப்பிலே பாடப்பட்டன. இத்தகைய இயற்பாக்கள் தோன்றிய காலத்துக்குப்பின்னாக நமதுமொழியிலுள்ள வண்ணம், சிந்து, வரிப் பாட்டு என்னும் இவற்றைநிகர்த்த இசைப்பாக்கள் எழுந்தன. இவற் றுக்குத் திணை அகத்திணையேயாயிற்று. ஆர்க்கிலோகர் (Archilocus), அல்கேயர் (Alcaeus), சிமோனிதர் (Simonides), பிண்டார் (Pindar), அல்க்மன் (Alcman)என்னும் புலவர்களும் சபோ(Sappho) என்னும் கவிவல்ல பெண்மணியும் இசைப்பாக்கள் பல எழுதினார்கள்: இவற்றுட் பெரும்பாலன அழிந்துபோயின ; ஒருசில இன்றும் நின்று நிலவுகின்றன. தேவபாணிப்பாடல்களும், விழாக்காலங்களில் தேவர்ப் பராவுவார் பலர் ஒருங்குநின்று பாடுதற்கேற்ற குரவைப்பாடல்களும், இசைப்பாவுக்குரிய இலக்கணங்களோடு தோன்றின.

23. இதன்மேல் நாடகவியல்கள் தோன்றின. காடுகெழுசெல் விக்குப் பாவுக்கடன் கொடுக்குங்கால் அவளது நிலைமையைச் சிறப் புறக்கூறி வழுத்திநின்றாடும் கொற்றவைநிலைபாகிய பொதுவியற்கூத் தும் வெறியாட்டயர்ந்த வெங்களத்து மறியறுத்துக் குருதிப்பலி செலுத்தி வேலனை வழுத்திநின்றாடும் காந்தள் ஆகிய பொதுவியற்கூத் தும் ஒருபுடையொப்பெனற்குரிய பொதுவியற்கூத்தே பண்டை யவன புரத்தில் ரிருஜடி (Tragedy) என்னும் பெபரால் வழங்கப்பட்டது. ரிருஜேடி என்னும்சொல்லுக்குப் பொருள் "ஆட்டு

மறிக்கவிதை" யென்பது. உண்டாட்டுத்தெய்வமாகிய தயனிச (Dionysus) னுக்கு வேனில்விழாக் கொண்டாடுங்காலத்து, ஒரு ஆட்டுக்கடாவைப் பலிசெலுத்தி அத்தெய்வத்தினது மெய்க்கீர்த்தியையும் அவனைப் பரவும் வீராதுபுகழையுங் கூறுவதே ரிருஜெடிக்கு உரியபொருளாயிருந்தது. கிறிஸ்துவுக்குமுன் 525-ம் ஆண்டில் (கலி 2576 இல்) இருந்த அய்சகலீஸ் (Aeschylus) என்னும் புலவர் வீரருடைய மெய்க்கீர்த்தியைப்பாடும் ஆடற்பாட்டினைச் சீர்ப்படுத்தி அதனைக் கூற்றும் மாற்றமும் மிடைந்த நடையினதாக்கி, ஆடலரங்கினும் வினவுதற்கு ஒருவரும், விடுப்பதற்கு ஒருவரும் உடனெத்திசைப்போர் பலருமாக அமைத்தாராதலினால், இவரையே, யவனபுரத்து நாடகவியலுக்குத் தந்தை யென்றல் சாலும். இவருக்குப்பின்வந்த சோபக்கிளீஸ் (Sophocles) என்பவர் அரங்கத்தில் மூவர் நால்வர் ஒருங்குதோன்றியாடுமாறு கவியமைத்தார். இவருக்குப்பின்வந்த யூறிப்பிடீஸ் (Euripides) என்னும் புலவர் நாடகத்தை மேலும் விருத்திசெய்தார். அய்சகலீஸ் 70 நாடகமும், சொபக்ளீஸ் 113 நாடகமும், யூறிப்பிடீஸ் 92 நாடகமும் எழுதிமுடித்தார்கள். இவர் மூவரும் எழுதிய நாடகங்கள் வீரர்புகழ் கூறும் "ரிருஜெடி"யின் பாலவாகலின், வீரம், வெகுளி, உருத்திரம், சோகம், பெருமிதம் என்னுஞ் சுவைகள் பொருந்தி விளங்குவன.

24. வேனில்வேள் ஆகிய தயனிசன் என்னுந்தெய்வத்துக்கு விழாக்கொண்டாடுங்காலம் மாவும் புள்ளும் துணையொடுவதியும் வசந்தகாலமாதலினால் அக்காலத்து உண்டாட்டினால் களிதியங்கினோரும், யாறுங்குளனுங் காவு மாடிப் பதியிகந்து காமநுகர்வோருமாகிய இளையாருடைய உள்ளத்தில் உவகையும் நகையும் தோற்றுவது இயல்பேயாம். நகைச்சுவையும் உவகைச்சுவையும் நிறைந்த நாடகங்கள் "கமிடி" (comedy) எனப்படுவன; இச்சொல்லுக்குப்பொருள் "சிறுகுடிப்பாட்டு," "பண்ணைப்பாட்டு" என்று கொள்ளலாகும். நமது தமிழ்மொழியிலுள்ள குறத்திப்பாட்டு, உழத்திப்பாட்டு என்னும் இவை யவனபுரத்தாரது பண்ணைப்பாட்டு இலக்கணங்களைப் பெரிதும்பெற்றன. கி. மு. 427-ம் ஆண்டிலிருந்த அறிஸ்டோபாணிஸ் (Aristophanes) என்னும் பெரும்புலவர் சமூகவாழ்க்கையிலுள்ள தவறுதல்களையும், தலைவராகவுள்ளோரது குறைவுகளையும் எடுத்துக்காட்டுவதற்குப் பண்ணைப்பாட்டினை யுபயோகித்தார். பறவைகளும், வண்டுகளும், கார்முகிலும் தங்கள் கருத்தை

வெளியிட்டுச்சொல்லுவதாக அமைத்து இப்பெரும்புலவர் சமூகவாழ்க்கையிலுள்ள தீமைகளை யெடுத்துக்காட்டும் நீர்மை மிக வியக்கத்தக்கது. இவரனையபுலவர் ஒருவர் இந்நாட்களில் நம்மிடையே யிருப்பாராகில் நமது சமூகவாழ்க்கையிலிருக்கும் தீமைகளைக் குறவஞ்சிநாடகமாகவோ, உழத்திப்பாட்டாகவோ பாடி நம்மை நகைப்பிப்பதோடு நல்வழிப்படுத்துவதற்கும் வல்லவராவார்.

25. நாடகநூல்கள் பலவாகநிறைந்தபின்னர் வசனநூல்கள் எழுந்தன. பாடலானது நிரம்பிய சுவையும் பாவமும் உடையதாயிருத்தல்வேண்டும். அதிலும் இசைப்பா பாவிகமும், மெய்ப்பாடும் பெற்றன்றிப் பிறக்கமாட்டாது. ஆசானொருவன் தன் மாணாக்கனுக்கு அறிவு நிறைவுறுத்தும்பொருட்டு இலக்கணம், தருக்கம், அறநெறி, தேசசரித்திரம், விஞ்ஞானசாஸ்திரம், தத்துவசாஸ்திரம் என்னும் இவற்றைச் சொல்லிவைக்குமிடத்துத் தெளிவுவேண்டப்படுவதேயன்றிப் பாவிகமும் மெய்ப்பாடும் வேண்டப்படா; ஆதலால் இவற்றைக்கூறும் நூல்களை உரைநடையில் அமைத்தலே பொருத்தமாம். நமது முன்னோர் செப்பலோசைவாய்ந்த வெண்பாவினும், சொற்சீரடிபெற்ற சூத்திரப்பாவினும் அமைத்ததுவும் பொருத்தமேயாம். யவனபுரத்தார் மேற்குறிப்பிட்ட பொருள்கண்மேலனவாய பலவசனநூல்கள் இயற்றினார்கள். கி. மு. 484 இல் பிறந்த ஹெறெரோடோற்றஸ் (Herodotus) என்பார் யவனபுரத்துத்தேசசரித்திரமொன்றைச் சிறப்புற எழுதினர். இவருக்குப்பின் வந்த துசிடிடீஸ் (Thucydides) என்பவர் பாரசீகருக்கும் யவனபுரத்தாருக்கும் இடையில் நடந்த பெலப்பொண்ணேசியயுத்தத்தைக்குறித்த ஒரு இதிகாசநூலை எழுதினர். இந்த யுத்தத்தினதுவரலாறு முதலியவற்றை யவனபுரத்து அரசியல்வரன்முறை யென்னுந் தலைப்பெயர்க்கீழ் ஆராய்வாம். செனொபன் (Xenophon) எனப் பெயரிய ஒருதளகர்த்தனும் சரித்திரச்சார்பாக இயற்றிய நூல் ஒன்று உண்டு.

26. யவனபுரத்தில் சுயவாசுநிலைத்திருந்தகாலம்வரையும் இயல் இசை நாடகநூல்களும், அர்த்தசாஸ்திரம், அலங்காரசாஸ்திரம் என்னும் இவையும் பெருகிவளர்ந்தன. அரசியல் நிலைததும்பியபின்னரும் மொழியும் வீழ்வெய்தியது. சுயவாசு நிலைத்திருந்தகாலத்தில் நீதிமன்றத்திலும் அத்தாணிமண்டபத்திலுஞ் சிறப்படைவதற்குச் சொல்வன்மை யின்றியமையாததொன்றாயிருந்தது. டெமொஸ்தினீஸ்

(Demosthenes)போன்ற சொல்வன்மையிற்சிறந்தோர், மக்களாற் பெரிதும் மதிக்கப்பட்டார்கள். அமர்க்களத்தினின்று போர்புரிந்தவீரன் அப் போரினைச் சிறப்பித்துப்பாடும்பாடலுக்கும் போர்முனையை யொருபொழுதுங்காணாத கோழைநெஞ்சன் போரினைச் சிறப்பித்துப்பாடும் பாடலுக்கும் பெரிதும் வேற்றுமையுண்டு. தமிழ்நூலிற் றலைசிறந்து விளங்கும் புறநானூறு என்னும்நூலானது வடிவேலேந்தி அடுகளத்துப் பொருத சுத்தவீரர்களாற் பாடப்பட்ட வஞ்சினக்காஞ்சிபோன்ற செய்யுட்களைத் தன்னகத்துக்கொண்டமையானன்றோ நாம் அதனைப் பொன்னேபோற்போற்றுகின்றோம். யவனபுரத்துப் பூர்வநூல்களும் இத்தகையினவே; ஆதலினாலன்றோ அவை இன்றும் நிலைபெற்றுநின்று தேவருலகத்து அமுதம்போலப் படிப்போருக்கு உற்சாகத்தையுந் தீரவீரத்தையும் தருகின்றன. ஆங்கிலநாட்டிலுள்ள இளைஞர்கள் கணக்காயரிடத்துக் கல்விகற்குங்காலத்திலேயே லத்தீன், கிறீக் மொழிகளைப் படித்துவிடுகிறார்கள். அதனால் அவர்கள் பாலப்பருவத்திலேயே வீரமும் பெருமிதமும் உடையவர்களாய் விளங்குகிறார்கள். நமதுநாட்டில் கற்றுவல்லோரென்றிருப்போர்தாமும் புறநானூற்றினைப் படிப்பதில்லை. நேற்றும் இன்றும் வெளிவந்த பிழைபொதிந்த, சீர்கெட்டநாவல்களே நமதுசிறுவர்செவிக்கு உணவாகின்றன. வீரகாவியங்களைக்கற்றால் உள்ளம் வீரத்தன்மையடையும்; ஆதலால் மேற்றிசையோர் தமதுசிறுவருக்கு ஈலியமகாகாவியம், லத்தீன்மொழியில் சீசர் என்னுஞ் சக்கரவர்த்தியெழுதிய காலதேயயுத்தம் (Gallic War) என்னும் நூல்களைக் கற்பித்துவைப்பார்.

27. யவனபுரத்துத் தத்துவஞானிகளைப்பற்றியும் அவர்களெழுதிய நூல்களைப்பற்றியும் ஒருசில கூறுவாம். கி. மு. 600 (கலி 2500) அளவில் மிலேத்ஸ் (Miletus) என்னும் நாட்டில்வசித்த தாலேஸ் (Thales) என்னும் தத்துவஞானி பூதநூல், வானநூல், கணிதநூல், என்னுமிவற்றில் வல்லவரெனப் பெயர்வாய்ந்தார். இவர் அனைத்துப் பொருட்களுக்கும் நீரே முதற்காரணம் எனக் கூறினார். இவர் மாணவராகிய அனக்சிமாண்டர் (Anaximander) என்பவர், மழை ஆகாயத்தினின்று வருஷிக்கிறதாதலால் நீருக்கும் முதற்காரணமாகிய ஆகாயமே அனைத்திற்கும் முதற்காரணம் என்றார். இவர் மாணவராகிய அனக்சிமேனஸ் (Anaximenes) அனைத்தினும் சலனத்தையுண்டாக்குகின்ற

பிராணனே முதற்காரணமாகும் என்னுங் கொள்கையினை நிறுவினர். இங்ஙனம் முதற்பொருளாராய்ச்சி நடந்துகொண்டிருந்தகாலத்திற்றானே, முதற்பொருளுக்கும் பிறபொருளுளவேல் அவற்றுக்கும் இடையிலுள்ளதொடர்பு (Relation) இத்தன்மையதென ஆராயும் ஆராய்ச்சியும் நடந்தது. இவ்வாராய்ச்சியின்பயனாக மூவகைப்பட்ட கொள்கைகள்நிலைபெற்றன. இவை மேலைத்தேசத்துத் தத்துவசாஸ்திரத்தில் இன்றும் நின்று நிலவுகின்றனவாதலால் இவற்றைச் சற்று விரிவாக நோக்குவது இன்றியமையாததாகின்றது. ஆவதும் அழிவதுமாகிய தோற்றம் பொய்த்தோற்றம் என்றார் ஒரு சாரார். இவரது கொள்கையின்படி ஆதியிலுள்ளதே (Being) பொருளெனப்படுவது; ஆவதும் (Becoming) அழிவதும் உள்ளதெனப்பட்ட முதற்பொருளினின்று வேறுபட்டனவல்லவாகலான், அவற்றினைப் பிறிதுபொருள் எனல் வேண்டாஎன்பது. இக்கொள்கையோர் எலேயாரிக்ஸ்(Eleatics) எனப்படுவார். ஹெறுக்கிளிற்றஸ் (Heraclitus) என்பவருடையகொள்கையின்படி ஆவதும் அழிவதுமே பிரத்தியக்ஷமாகக்காணப்படுவவாதலால், நிலைபெற்றநீர்மையதாகிய முதற்பொருள் என்பதொன்றில்லையென்பது. மூன்றாம்வகையாருள் அணுப்பரிணாமவாதிகள் நிலைபெற்ற முதற்பொருளுமுண்டு, ஆதல் அழிதலும் உண்டு என்னுங் கொள்கையினர்.

23. முதல்வகையோருட் டலைசிறந்தோர் செனோபானெஸ் (Xenophanes), பார்மெனிடஸ் (Parmenides), மெலிசஸ் (Melissus) சேனோ (Zeno), கோர்கியாஸ் (Gorgias) என்பவர்கள். பூர்வயவனர் பலதெய்வவணக்கமுடையவர்களாயிருந்தார்கள். செனோபானஸ் என்பவர் பல தெய்வவணக்கத்தைக் கண்டித்து, ஆண்டவன் ஒருவனேயென்றும், அவன் அகண்டரூபியென்றும், காணுங் கண்ணனைத்தும் கேட்குஞ் செவியனைத்தும், உணரும் உள்ளமனைத்தும் அவனதேயென்றும் போதித்தார். இவருடைய மாணவராகிய பார்மெனிடஸ் என்பவர் இறைவனொருவனே அனைத்துமாயிருக்கிறானென்றும், அவன் வேறுபாடெய்தப்பெறாதவனாதலால் ஆவதும் அழிவதும் இல்லையென்றும், அங்ஙனமாகலின், ஆவதும் அழிவதுமாகத் தோற்றுகிறதோற்றம் பொய்த்தோற்றம் என்றும் விரித்துவிளக்கினார். சகத்தோற்றம் பொய்த்தோற்றமாயினும் சிருஷ்டி சங்காரம், உண்டு என்பதும் அவை, காலவெல்லையுட்பட்டனவென்பதும் இவரது கொள்கை. இவரது மாணவர் மெலிசஸ்

என்பவர் தோற்றமும் அழிவும் பொய்யாதலின் உலகம் அநாதியாக நிலைத்திருப்பது என்றும், அது ஈஸ்வரனிடத்து உள்ளது என்றுங் கூறினர். சேனே என்பவர் சலனம் என்பதொன்றில்லையென்றும், அனைத்துப்பொருட்களுக்கும் இடந்தருகிற ஆகாயம் என்பதை ஒரு பொருளாகக் கொள்வோமாயின், அந்தப்பொருளுக்கு இடந்தருதற்குப் பிறிதொரு ஆகாயம் வேண்டப்படும் ஆதலால் ஆகாயம் பொருளெனப் படாதென்றும் விளக்கினர். அவர் மாணாக்கர் கோர்கியாஸ் என்பவர் ஏனையபூதங்களும் இல்பொருளெனக்காட்டி ஒரு பொருளுமில்லையென வாதிக்குங் கொள்கையினராக விருந்தார்.

29. ஏனையதத்துவசாஸ்திரக்கொள்கைகளை விசாரிக்கப்புகுமுன் யவனபுரத்துத்தேவதைகளைப்பற்றி ஒருசில கூறுவாம். வானகத்தையும் மண்ணகத்தையும் உருவகப்படுத்தி, அவற்றை முறையே யுரேனஸ் (Uranus,) என்பதொரு ஆண்டெய்வமாகவும் கே; ஜெ (Ge) என்பதொரு பெண்டெய்வமாகவும் பூர்வயவனர் வணங்கினர். இவ்விருதெய்வங்களுக்கும் பலபூதர்கள் (Titans) புதல்வராகத்தோற்றினரெனவும், அவருட் சிரேட்டர் கிரேநோஸ் (Chronos) என்பதாகவும் புராணங் கூறுகிறது. கிரேநோஸ் என்னும்மொழிக்குக் காலம் என்பது பொருள். கையில் அரிவாள் ஏந்திய ஒருவயோதிகனது தோற்றமாகும் இந்தத் தெய்வத்தினது தோற்றம். கிரேநோஸ் றேயா (Rhea)வை மணமுடித்துப் பலபுதல்வர்களையும் புதல்வியர்களையும் தோற்றுவித்தார். தன் மகனொருவன் தன்னிலும் மிக்கவனாகித் தான் அரசுபுரியும் தேவலோக ராஜ்யத்தைக் கைப்பற்றுவான் என்பதைக் கிரேநோஸ் அறிந்தமையினாலே றேயா பெறுகிற சிசுக்களையெல்லாம் பிறந்தவுடனே எடுத்து விழுங்கிவிடுவது கிரேநோசுக்கு இயற்கையாயிருந்தது. றேயா ஒருவகைச்சூழ்ச்சியினால் ஈற்றிற்பிறந்தசிசுவாகிய ஜூப்பிற்றரை (Jupiter) மறைத்துவைத்துவிட்டாள். இந்தப்பிள்ளை வளர்ந்து பெரியவனாகித் தந்தையைவென்று, தந்தையினால் விழுங்கப்பட்ட தனது உடன்பிறந்தாரனைவரையும் தந்தைவயிற்றிலிருந்து அழைப்பித்துத் தனக்குத் துணையாக்கி, அதன்பின்னர்த் தந்தையைத் தேவலோகத்திலிருந்து துரத்திவிட்டுத் தானே தேவலோகத்துக்குத் தலைவனாயினன். தனது சகோதரனாகிய போசெயிடனை (Poseidon) நீருலகத்துக்குத் தலைவனாகவும், மற்றொரு சகோதரனாகிய பிளூட்டோவை இருளுலக (நரகலோக)த்துக்

குத் தலைவனாகவும் ஆக்கினான் தனது உடன்பிறந்தாளாகிய ஜூனோ (Juno)வைத் தேவலோகத்துக்கு ராணியாக்கினான்; சீறேஸ் (Ceres) என்னும் மற்றொரு சகோதரியைத் தானியங்களுக்கு அதிபதியாக்கினான்; வெஸ்டா என்னும் மற்றொரு சகோதரியை அட்டிலுக்கும் அட்டில்வைகும் அக்கினிக்குந் தலைவியாக்கினான். தேவராஜனுடையமகன் அப்லோ (Apollo; கவிதைக்கும் இசைக்குந் தலைவன்; கையில்யாழும் வில்லும் ஏந்திய ஏர்மிக்க இளைஞனுடைய உருவம் இத்தெய்வத்தினது உருவம். தேவராஜனுடைய மற்றொருபுதல்வனாகிய ஹேர்மேஸ் (Hermes) தேவர்களுக்குத் தூதுவனாயினான். இத்தெய்வத்தைப் பற்றி ஹோமர் பாடிய இன்னிசைக்கவிதை யொன்றுண்டு. இத்தெய்வத்துக்கு வானிலும் மண்ணிலும் விரைந்துசென்று சஞ்சரிப்பதற்கு உபகாரமாகக் கால்களிலும், தலைப்பாகையிலும் சிறகுகளுண்டு. கையில் பாம்பு இரண்டு சுற்றிய தண்டு ஒன்று உண்டு. அக்னிலோகத்துக்கு அரசனும் கொற்றொழில்வல்லவனுமாகிய வல்கன் (Vulcan) என்னுந் தெய்வமும், தேவசேனாதிபதியாகிய அறேஸ் (Ares)என்னுந் தெய்வமும் முறையே கொற்றொழிலோராலும் சேனைத்தலைவராலும் வணங்கப்பட்டு வந்தன. தேவராஜனுடைய சிரத்திலிருந்து கவசம்பூண்டதோற்றத்தோடுகூடிய ஒருபெண்மகவு வெளிப்பட்டாள். இவள் ஞானத்துக்கும் வீரத்துக்குமுரிய தெய்வமாயினாள்; இவள் பெயர் அத்தேனா (Athena) என்பது; இவள் ஞானத்துக்கும் வீரத்துக்குமுரிய தெய்வமாதலால் இவள்சிந்தை சிறிதேனுங் காமத்தின்பாற் சென்றிலது. அபல்லோவோடு உடன்தோன்றிய ஆர்டேமிஸ் (Artemis) என்னுந் தேவதை வில்லும் அம்பும் ஏந்தி வேட்டைத்தொழிலுக்கு உரிய தெய்வமாயினாள்; இவளைச் சந்திரமண்டலத்துக்கு அதிதேவதையாகவும், அபல்லோவைச் சூரியமண்டலத்துக்கு அதிதேவதையாகவும் யவனபுரத்தார் கொண்டார்கள். ஆபிரதை (Aphrodite) தேவராஜனுடைய மற்றொருபுதல்வி. இவள் அழகுக்குங் காமத்துக்குந் தெய்வம்; இவள் புதல்வன் ஏறோஸ் (Eros). இவன் என்றும் பாலப்பருவங்கழியாத மன்மததேவன். ஜூப்பிற்றர், பொசெயிடன், அபல்லோ, வல்கன், அறேஸ், ஹேர்மேஸ், ஜூனோ, அத்தேனா, ஆர்டேமிஸ், ஆபிரதை, வெஸ்டா, சீறேஸ் என்னும் பன்னிருதேவதைகளுமே சிறப்புடையனவாக யவனர்களாற் கொண்டாடப்பட்டுவந்த தேவதைகளாம்.

30. ஜூப்பிற்றர் என்னும் மொழி த்யாஉஸ் பித்ரு (Dyaus) Pitar) என்னும் வடசொல்லினது சிதைவாகும்; இத்தெய்வத்தை த்யாஉஸ் என்னும் மொழியினது சிதைவாகிய சேயுஸ் (Zeus) என்னும் பெயரினாலும் வழங்குவதுண்டு. த்யாஉஸ் என்னும் வடமொழி பிரகாசம் என்னும் பொருளினையுடையது. இப்பெயர் கடவுட்பெயராக இருக்குவேதத்திலும் வழங்கப்படுகிறது. யூறனஸ் என்பது உராணஸ் என்பதன் சிதைவு. உகர வகர ஒற்றுமைபற்றி இச்சொல் வடமொழியில் வருண: என்று வழங்கும். ரிக்ஸம்ஹிதையில் வருணன் என்னும் மொழி வானமண்டிலத்துக்குத் தலைவனாகிய தேவதேவனைக்குறிப்பது. பின்னாட்களில் இம்மொழி கடற்றெய்வத்தின்பெயரைக் குறிப்பதாயிற்று. பூர்வ யவனர் தமது முன்னோராகிய ஆரியமக்களிடத்திருந்து பிரிந்துபோயகாலத்து இந்த இரண்டு தெய்வப்பெயரையும் அறிந்திருந்தார்களென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. காலதேவதை சூரியனுடைய புதல்வன் என்பது நமது புராணங்களின் கொள்கை. சூரியன் காலதேவதையுடைய மகனுக்குமகன் என்பது யவனபுரத்துக்கொள்கை. ஆகாசமாகிய வெறுவெளிக்குத் தேவதை யுரனஸ்; அதனினின்றும் தோற்றிய காலதத்துவத்துக்குத்தேவதை கிரேணஸ்(இத்தேவதைக்கு சற்றேண் (Saturn) என்னும் பெயருமுண்டு,; அதினினின்று தோற்றிய ஒளிக்குத் தேவதை ஜூப்பிற்றர், அதனினின்று தோற்றிய சூரியசந்திரருக்குத் தேவதைகள் அபல்லோவும் ஆர்டெமிசும் என்று இவ்வாறு அறியலாகும். பொசெயிடனுக்கு மற்றொருபெயர் நேப்ரியூன்(Neptune); ஜூனோவுக்கு மற்றொருபெயர் ஹேரே (Here); அத்தேனாவுக்கு மற்றப்பெயர்கள் பல்லாஸ் (Pallas), மினேர்வா (Minerva); வல்கனுக்கு மற்றொருபெயர் ஹெபேஸ்தஸ் (Hephæstus); அரேசுக்கு மற்றொரு பெயர் மார்ஸ் (Mars); ஹெர்மெசுக்கு மற்றொருபெயர் மேர்க்கரி (Mercury); ஆர்டெமிசுக்கு மற்றொரு பெயர் டயனா (Diana); ஆவிரதைக்கு மற்றொரு பெயர் வீநசை (Venus); வெஸ்டாவுக்கு மற்றொரு பெயர் ஹெஸ்டியா (Hestia); சீறெசுக்கு மற்றொரு பெயர் டேமீற்றர் (Demeter). இனி, யவனபுரத்துத் தத்துவஞானம் என்னும் தலைப்பெயர்க்கீழ் யவனபுரத்து அறிஞர்கள் தலைசிறந்த தத்துவஞானிகளினுடைய கொள்கைகளை ஆராய்வாம்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை, சென்னை.

பிரபோதசைதந்யர்.

வசிட்டரும் வள்ளுவரும் கூறிய அரசியல்.

ஸ்ரீராமபிரானுக்கு வசிட்டர்கூறியதாக இராமாவதாரத்திற்கூறப்படும் அரசியலும், வள்ளுவர்கூறிய அரசியலும் ஒப்புமையுடையவாகக் காணப்படுதலின், அதனை இங்கே விளக்கிக்காட்டுதும்.

வசிட்டர் ஸ்ரீ ராமபிரானைநோக்கிப் "போர்வலாய்! புல்குகாதற்புரவலன் நினக்கு நானிலம் நானைகல்கு" மென்று, பின்னும், "உனக்கு உறுதிப்பொருளொன்று கூறுவதுண்டு; நன்று கேட்டு நன்கு கடைப்பிடி" என்று அவனுக்கு அரசியல்கூறுவாராய், ஏ. இராம! நீ அரசியல்நடாத்துங்கால், அதற்குத்துணையாகிய அந்தணரைப்பேணுதி. அவர்களோ!

"கரியமாலினுங்கண்ணுதலானினும்
உரியதாமரைமேலுறைவானினும்
விரியும்பூதமொரைந்தினும்மெய்யினும்
பெரியர்" அந்த,

"அந்தணாளர்முனியவுமாங்கவர்
சிந்தையாலருள்செய்யவுந்தேவரில்
நொந்துளாரையுநொய்துயர்ந்தாரையு
மைந்தவெண்ணவரம்புமுண்டாங்கொலோ."

"அனையராதலினையவிவ்வெய்யதீ
வினையினீங்கியமேலவர்தாளினைப்
புனையுஞ்சென்னியையாய்ப்புகழ்ந்தேத்துதி
இனியகூறிநின்றேயினசெய்தியால்"

"ஆவதற்குமழிவதற்கும்மவர்
ஏவநிற்கும்விதியுமென்றாலினி
யாவதெப்பொருளிம்மையுமம்மையும்
தேவரைப்பரவுந்துணைசேர்த்ததே"

என்று அந்தணரைப் பேணுமாறு முதற்கட்கூறினர். இவ்வந்தணரைப் பேணுதலை, வள்ளுவரும் பெரியாரைத்துணைக்கோடலென்னு மதிகாரத்

தாற் கூறினர். அவ்வதிகாரப்பொருளை விளக்குழி, பரிமேலழகரும் பெரியாராவார் பேரறிவுடையாரென்றும், அவராவார் அரசர்க்கு மக்கட்கும் மண்ணுடத்தெய்வக்குற்றங்கள் வாராமற் காத்தற்குரிய அமைச்சர் புரோகிதரென்றும் கூறினர். பின்வாக்கியத்துட் டெய்வக்குற்றம்வாராமற் காத்தற்குரிய புரோகிதர் என்றது. அந்தணரை. இன்னும் அவ்வதிகாரத்துள்வரும்,

"உற்றநோய்நீக்கியுறாஅமைமுற்காக்கும்
பெற்றியார்ப்பேணிக்கொளல்"

என்னுங் குறளுரைக்கண் "உற்றநோய் என்றது தெய்வத்தானாக மக்களானாக தனக்கு முன்வந்த துன்ப"மென்றும், "அவற்றைநீக்கி உறாமை முற்காக்கும் பெற்றியாரென்றது அமைச்சரும் புரோகிதரு" மென்றும் பரிமேலழகர்கூறிய உரையானும் வள்ளுவர் அவ்வதிகாரத்துள் அமைத்தமை பெறப்படும்.

இவ்வாறு அந்தணரைப்பேணும்வழக்கம் அக்காலத்தரசர்க்குளதென்பது,

"அருந்தவமுனிவருமந்தணாளரும்
வருந்துதலின்றியேவாழ்வின்வைகினர்
இருந்துயருழக்குநரெற்பினெனன்பதோர்
அருந்துயர்வருத்துமென்னகத்தையென்றனன்"

என்பதனானும், "வடாஅது பனிபடுநெடுவரைவடக்கும்" என்னும் அடியை முதலாகவுடைய புறநானூற்றுச்செய்யுளுள்வரும்,

"இறைஞ்சுகபெருமநின்சென்னிசிறந்த
நான்மறைமுனிவரேந்துகையெதிரே"

என்னு மடிகளானும், பதிற்றுப்பத்தில்வரும் "பார்ப்பார்க்கல்லது பணிபறிகலேயே" என்னு மடியானும், வியாழ வெள்ளிகளைத் தேவாசுரர்கள் புரோகிதராகக்கொண்டு பேணினமையானும், சஞ்சயமுனிவரைத் திருதராட்டிரன் புரோகிதராகக்கொண்டு பேணினமையானும், தௌமியமுனிவரைப் பாண்டு புரோகிதராகக்கொண்டு பேணினமையானும் அறியப்படும்.

இன்னும் வசிட்டர், ஸ்ரீராமபிரானைநோக்கி, அறமும் நீதியும் அருளும் எந்நாளும் நின்னால் நீக்கப்படாதன:

"உருளுநேமியுமொண்கவரெஃகமும்
மருளில்வாணியும்வல்லவர்மூவர்க்கும்
தெருளுநல்லறமும்மனச்செம்மையும்
அருளுநீத்தபின்னாவதுண்டாகுமோ"

எனக் கூறினர். இவ்வாறே வள்ளுவரும்,

"கொடையளிசெங்கோல்குடியோம்பல்நான்கும்
உடையானாம்வேந்தர்க்கொளி"

எனக் கூறினர். இதனுள் கொடையென்றதனா லறமும், செங்கோல் என்றதனால் நீதியும், குடியோம்பல் என்றதனால் அருளும் குறிப்பிக்கப் பட்டன.

இன்னும், வசிட்டர், சூது மிகக்கொடியது:—

"சூதுமுந்துறச்சொல்லியமாத்துயர்
நீதிமைந்தநினக்கிலையாயினும்
ஏதமென்பனயாவையுமெய்த்தற்
கோதுமூலமவையெனவோர்தியே"

என்றார். சூதுமுந்துறச்சொல்லியமாத்துயர் என்றது, பெருந்துயரைத் தரும் சூது கள்ளு இருமனப்பெண்டிர்முயக்கம் என்பனவற்றை. இவ்வாறே வள்ளுவரும்,

"இருமனப்பெண்டிருங்கள்ளுங்கவறும்
திருநீக்கப்பட்டார்தொடர்பு"

எனக் கூறினார். இவை குற்றங்கட்கு மூலமாதலை இதனானும்,

"சிறுமைபலசெய்துசீரழிக்குஞ்சூதின்
வறுமைதருவதொன்றில்" என்பதனானும்,

"உடைசெல்வமூண்ணொளிகல்வியென்றைந்து
மடையாவாமாயங்கொளின்" என்பதனானு மறிக.

இன்னும், வசிட்டர், பலரோடு பகைகொள்ளாதி; கொள்ளின் வேரொடுங்கெடுவாய். ஓரரசன்,

"யாரொடும்பகைகொள்ளிலனென்றபின்
போரொடுங்கும்புகழொடுங்காது தன்
தாரொடுங்கல்செல்லாதது தந்தபின்
வேரொடுங்கெடல்வேண்டலுண்டாகுமோ."

எனக் கூறினர். இவ்வாறே வள்ளுவரும்,

"ஏமுற்றவரினுமேழைதமியனாய்ப்
பல்லார்பகைகொள்பவன்" என்பதனாலும்,

"பல்லார்பகைகொளலிற்பத்தடுத்ததீமைத்தே
நல்லார்தொடர்கைவிடல்"

என்னுங்குறளுள், பல்லார் பகைகொளல் என்பதினாலுங் கூறினர்.

இன்னும், வசிட்டர்,

"கோளுமைம்பொறியுங்குறையப்பொருள்
நாளுங்கண்டுநடுக்குறுகோன்மையின்
ஆளுமவ்வரசேயரசன்னது
வாளின்மேல்வருமாதவமைந்தனே"

எனக் கூறினர். இச்செய்யுளின்கருத்து, விடயங்களைக்கொள்ளுதலை யுடைய ஐம்பொறிகளும் அவ்விடயங்களைக் கொள்ளுதலிற் சுருங்க, அவற்றால் அவ்விடயங்களை அனுபவித்து, அனுபவிக்குங்கால் அதனாற் றமக்கு யாதாயினும் ஏதம்வருமோவென்று அஞ்சுகின்றவலிமையோடு ஆளுகின்ற அரசே அரசு; அது வாளிற்றவமாகும் என்பது வாளி லிருந்து தவஞ்செய்வோர் சிறிது சோரினும் வீழ்ந்து அவ்வாளால் ஏத மடைவர், அது போல ஐம்பொறியைபடக்கியாளுமரசும், அவ்வடக்கு தலிற் சிறிது தவறின் அவ்வைம்பொறிவாயிலாகக் கேடடையும் என்ப தாம். [கோளும் என்பதற்குக் குற்றமென்றும், கண்டு என்பதற்குச் செய்து என்றும், நடுக்குறும் என்பதற்குப் பழிக்கு அஞ்சி என்றும் பொருள் கூறுவாருமுளர்.] இவ்வாறே வள்ளுவரும்,

"காதலகாதலறியாமையுய்க்கிற்பி
னேதிலவேதிலார் நூல்"

எனக் கூறினர்.

இன்னும் வசிட்டர் மிக்க தோள்வலிபுடையாராயினும் அமைச்சர் சொல்வழியொழுகல்வேண்டும்:—

"உமைக்குநாதற்குமோங்குபுள்ளூர்திக்கும்
இமைப்பிலாட்டமொரெட்டுடையானுக்கும்
சமைத்ததோள்வலிதாங்கினராயினும்
அமைச்சர்சொல்வழியாற்றுதலாற்றலே."

எனக் கூறினர். இவ்வாறே வள்ளுவரும்.

"செவிகைப்பச்சொற்பொறுக்கும்பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த்தங்குமுலகு."

எனக் கூறினர்.

இன்னும் வசிட்டர், இராம! நீ எவ்வுயிர்க்கண்ணும் அன்புடையையாயொழுகுதி. அன்பு ஆக்கம்தரும்,—

"என்புதோலுடையார்க்குமிலார்க்குந்தம்
வன்பகைப்புலன்மாசறமாய்ப்பதென்
முன்புபின்பின்றிமூவுலகத்தினும்
அன்பினல்லதோராக்கமுண்டாகுமோ"

எனக் கூறினர். அவ்வன்பைத் திருவள்ளுவரும், "கொடையளிசெங்கோல்குடியோம்பல்நான்கும்—உடையானும்வேந்தர்க்கொளி" என்பதில் அளி என்பதனாலும்,

"அளியின்மைஞாலத்திற்கெற்றற்றேவேந்த
னளியின்மைவாழுமுயிர்க்கு"

என்பதனாலும், சுற்றந்தழாஅல் என்னும் அதிகாரம் முதலியவற்றானுங் கூறினர்.

இன்னும் வசிட்டர், இராம! நீ தருமநூலிற்சொன்னவிதியை ஐயமின்றி ஆராய்ந்து அதனைக் கடவாமற் காக்குதி.

"வையமன்னுயிராகவம்மன்னுயிர்
உய்யத்தாங்குமுடலன்னமன்னனுக்
கைய்மின்றியறங்கடவாதருள்
மெய்யினின்றபின்வேள்வியும்வேண்டுமோ"

என்று கூறினர். இவ்வாறே வள்ளுவரும்,

"ஓர்ந்துகண்ணோடாதிறைபுரிந்தியார்மாட்டும்
தேர்ந்துசெய்வஃதேமுறை" எனக் கூறினர்.

மேலேகூறிய இராமாவதாரச்செய்யுளில் மெய்யினிற்றல் என்றது முட்டாதுசெய்தலே. வேள்வியும்வேண்டுமோவென்றது வேள்வியின்றியே தன்னாட்டின்கண் மழைபெய்தலும், வென்றியடைதலும் முதலிய வேள்வியால்வரும்பயன்களை அடைவானென்பதுபோதரநின்றது. அதனை;

"இயல்புளிக்கோலோச்சுமன்னவனாட்ட
பெயலும்விளையுளுந்தொக்கு" என்பதனானும்,
வேலன்றுவென்றிதருவதுமன்னவன்
கோலதூஉங்கோடாதெனின்" என்பதனானும்,

"இறைகாக்கும்வையகமெல்லாமவனை
முறைகாக்கும்முட்டாச்செயின்"

என்பதனானு முணர்க.

இன்னும் வசிட்டர்,

"இனியசொல்லினனீகையனெண்ணினன்
வினையன்றூயன்விழுமியன்வென்றியன்
நினையுநீதிநெறிகடவானெனில்
அனையமன்னற்கழிவுமுண்டாங்கொலோ"

என்று கூறினர். இதில் இனியசொல்லினன் ஈகையன் என்பது வள்ளுவர்நூலுள், "இன்சொலாலீத்து" என்னுங் குறட்பகுதியையும், 'எண்ணினன்' 'வினையன்' என்பன தெரிந்துசெயல்வகை, தெரிந்துதெளிதல், தெரிந்துவினையாடல் முதலிய அதிகாரங்களையும், 'தூயன்' என்பது குற்றங்கடிதல் என்னு மதிகாரத்தையும், 'விழுமியன்' என்பது

சிற்றினஞ்சேராமை முதலிய அதிகாரத்தையும், வென்றியன் என்பது ஊக்கமுடைமை ஆள்வினையுடைமை இடுக்கணழியாமை முதலிய அதிகாரங்களையும், நீதிநெறிகடவான் என்பது செங்கோன்மை கொடுங்கோன்மை முதலிய அதிகாரங்களையும் குறிப்பித்துநின்றன.

இன்னும் வசிட்டர், ஸ்ரீராமபிரானைநோக்கி, நீ காலத்தைநோக்கல் வேண்டும்:—

"[5]சீலமல்லனநீக்கிச்செம்பொற்றுலைத்
தாலமன்னதனிநிலைதாங்கிய
ஞாலமன்னற்குநல்லவர்நோக்கிய
காலமல்லது கண்ணுமுண்டாங்கொலோ"

என்றுகூறினர். இதில் சீலம் என்றது அரசவொழுக்கத்தை. அல்லன வென்றது அறமல்லாதனவற்றை. இவை வள்ளுவர்நூலுள், 'அறனிழுக்காதல்லவைநீக்கி', என்னுங் குறட்பகுதியையும், செம்பொற்றுலைத்தாலமன்னதனிநிலை, என்றது, "ஓர்ந்துகண்ணோடாதிறைபுரிந்தியார்மாட்டும்—தேர்ந்துசெய்வஃதேமுறை" என்னுங் குறளில், 'கண்ணோடாதிறைபுரிந்தியார்மாட்டும்' என்னும் பகுதியையும், 'காலமல்லது கண்ணுமுண்டாங்கொலோ' என்றது, காலமறிதல் என்னுமதிகாரத்தையும், குறிப்பித்துநின்றன. அரசு துலைக்கொப்பாக இருத்தல்வேண்டுமென்பது, "படுவதுண்டுபகலாற்றி—இனிதுருண்டசுடர்நேமி" என்னும் புறநானூற்றுச் செய்யுளடியுள்வரும் 'பகலாற்றி' என்பதனானும் அறியப்படும்.

இன்னும் வசிட்டர், இராம! நீ பெரியோரைப்பேணல்வேண்டும். எனெனில்,

"ஓர்வினல்வினையூற்றத்தினருரை
பேர்விறலெல்வித்பெற்றுளதென்றபோ
தீர்விலன்புசெலுத்தலிற்செவ்வியோர்
ஆர்வமன்னவற்காயுதமாவதே"

ஆகவின், என்று கூறினர். இதில், ஓர்வினல்வினையூற்றத்தினர் என்றதும் செவ்வியோரென்றதும் பெரியோரைக் குறித்துநின்றன. இப்பெரியோரைப்பேணலை, வள்ளுவர் பெரியாரைத்துணைக்கோடல், பெரி

யாரைப்பிழையாமை என்னு மதிகாரங்களாற் கூறினர். விதி—கட்டளை; விதியினியல்பு எனினுமாம்.

இன்னும் வசிட்டர், இராம! நீ காமத்தையொழித்தல்வேண்டும்.

"தூமகேதுபுவிக்கெனத்தோன்றிய
வாமமேகலைமங்கையரால்வரும்
காமமில்லையெனிற்கடுங்கேடெனும்
நாமமில்லைநரகமுமில்லையே"

என்று கூறினர். இக்கருத்தை வள்ளுவரும், பெண்வழிச்சேறல், வரைவின்மகளிர் என்னு மதிகாரங்களுள் அமைத்துக்கூறினர்.

மேற்கூறிய நீதிகளையேயன்றி வேறுநீதிகளையும் வசிட்டர் ஸ்ரீ ராமபிரானுக்குக்கூறியதாக இராமாவதாரங்கூறுதலின், வள்ளுவர் கூறிய அரசியலினின்றும் எடுத்து இங்கே ஒப்புமைகாட்டாதொழிந்தனவும் அவற்றுள் அமையுமாறு ஓர்ந்துணர்க.

சி. கணேசையர்.

உ

இளங்கீரந்தையார்.

இப்புலவர் இளங்கீரன் என்ற பாவலரின் தந்தையார். இத்தொடர் சாத்தந்தை என்றாற்போல விதிநோக்கி—['இயற்பெயர்முன்னர்த்தந்தை' தொல்-புள்ளி. 52] இளங்கீரந்தை எனநின்றது. இவர் முல்லைத்திணையைப் பாடியுள்ளார். தவளைவாய் குழந்தைகள் காவிலிடும் சிறுசதங்கை வாய்க்கு ஒப்பென்பர், (குறுந்-148]. இவர் கூறும் 'தவளைவாய்' என்பதை ஆறும்வேற்றுமை நிலைமொழியீறாக நின்றகெட்டசந்தி என்றால் இயல்பு சந்தியாகாது என்பர் பிரயோகவிவேகநூலுடையார். [பிரயோ-சமாச-உ-உரை.] இவர் குறுந்தொகைப்பாட்டை [148] அகப்பொருள் விளக்கவுரைகாரர் எடுத்தாண்டு 'இறைமகள்மறுத்தல்' என்ற துறையுள் எழுதிக்காட்டுவர்,

---

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(௪0உ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

வரைக்காட்சிப்படலம்.

[சந்திரசைலச்சாரலைச்சேர்ந்த தசரதாதியர் அம்மலைவளங்களைக் கண்டு களித்ததைக் கூறுவது.]

168. கோவை ஆர் வடக் கொழுங் குவ டொடிதர நிவந்த
ஆவி வேட்டன, வரி சிலை அனங்கன் மேற் கொண்ட,
பூவை வாய்ச்சியர் முலை சிலர் புயத்தொடும் பூட்டத்,
தேவ தாரத்தும் சந்தினும் பூட்டின சில மா.

இ-ள். (அந்தச் சந்திரசைலச்சாரலிலே) மாதர்தனங்கள் (ஆகிய யானைகள், மைந்தர்) சிலருடையதோள் (களாகிய தூண்கள் கட்டுத்தறிகளாக, அவை)களிற் கட்டப்பட, (அந்தத் தனங்களுக்கு உவமானமாகிய) யானைகள் சில, தேவதாரு சந்தனமென்னும் மரங் (கள் கட்டுத்தறிகளாக அவை) களிற் கட்டப்பட்டன.

முதலிரண்டடிகள் மாதர் தனங்களுக்கும் மதயானைகளுக்கும் சிலேடை. கோவை ஆர் வடக் கொழும் குவடு ஒடிதர நிவந்த - 1. [தனங்கள்] ஆகாயத்தைப்பொருந்திய வடதிசையில் உள்ள (மேரு) மலை (ஒப்பாகமாட்டாமையால்) முறிந்துபோம்படி (எனவே, தோல்வியடையும்படி) வளர்ந்தன; [கோ - ஆகாயம். ஆர் - பொருந்து. குவடு - மலை. ஒடிதர - ஒடிய - தளர (மணிமேகலை); கெட(பரிபாடல்). நிவந்த - வளர்ந்தன.] 2. [யானைகள்] ஆகாயத்தைப்பொருந்திய ஆலமரத்தின் கொழுமையான கிளைகள் ஒடியும்படி உயர்ந்தன. [வடம் - ஆலமரம்.] ஆவி வேட்டன - 1. [தனங்கள்] ஆடவரது உயிரை விரும்பின. 2. [யானைகள்] தடாகத்தை விரும்பின. வரிசிலை அநங்கன் மேற்கொண்ட— 1. [தனங்கள்.] கட்டப்பட்ட வில்லையுடைய மன்மத(ன் உருவம் தொய்யிலாக எழுதப்பட்டத)னை மேலே கொண்டன; 2. [யானைகள்] அந்த மன்மதன்போன்ற வீரர் ஏறப்பட்டன.

பூவை - நாகணவாய்ப் பறவை. அது ஆகுபெயராய் அப்பறவையின் சொல்லைக்குறித்தது. வாய் ஆகுபெயராய் வாயினற்சொல்லப்படும் சொல்லையுணர்த்தியது. பூவைவாய்ச்சியர் - நாகணவாய்ப்பறவையின் சொற்போலும் சொற்களையுடையார் (ஆகிய மாதர்கள்). சந்து - சந்தனமரம். 'பூட்ட', 'பூட்டின' என்பவை 'எழுதிய ஓலை' என்பது போலப் படுவிகுதிதொக்குப் 'பூட்டப்பட,' 'பூட்டப்பட்டன' என்ற பொருள்பட நின்றன.

மா, எல்லா மிருகங்களுக்கும் பொதுப்பெயராயினும், இதற்குமுந்தியபாட்டிற் கூறப்பட்ட 'மன்மதக்களிறும் மாதர்கொங்கையும்' பற்றிக் கூறும் இந்தப்பாட்டில் முன்தொடர்புபற்றி யானையைக்குறித்தது. 'கோவை யார்வடக் கொழுங்துவ டொடிதர நிவந்த— ஆவி வேட்டன வரிசிலை அனங்கன்மேற் கொண்ட' என்ற விசேடணங்களாலும் 'மா' என்பது யானையை உணர்த்தியது.

169\. தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும், அவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவர் எனும்அது வழக்கே:
உருண்ட வாய்தொறும் பொன்உருள் உரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையும் பொன்னிறம் ஆக்கிய, இரதம்.

இ - ள். பெரியோர், (தம் போன்ற பெரியோரை யியல்பாகச்சேர்தலன்றி ஒருகால்) சிறியோரைச் சேர்ந்தாராலும், அச்சிறியோருடைய சிறுமையை மாற்று வாராய் அவரைத் தம்போலப் பெரியோராக்கு) வார் என்று சொல்லப்படுவது (உலக) வழக்கு: (அதுபோலத்) தேர்கள், (தம்) பொற்சக்கரங்கள் உருண்ட இடமெல்லாம் (அப்பொற்சக்கரங்களின் பொன்னை) உரைத்துக்கொண்டே ஓடிக் கருநிறமான கல்லையும் பொன்னிறமாக்கின.

தெருண்ட - தெளிந்த. மேலவர் - பெரியோர். மருண்ட - மயங்கிய. புன்மை - சிறுமை. மருண்டபுன்மை—மயக்கம் காரணமாக ஏற்பட்ட சிறுமை. எனும் அது - என்றுசொல்லும் அது - என்றுசொல்லப்படும் அது - என்றுசொல்லப்படுவது; இதுபோல, 'ஆண்மையென்னுமது' ஆண்மையென்று சொல்லப்படுவது என்றபொருளில் (தாடகைவதைப் படலம் ருஎ-ம் பாட்டில்) வருதல் காண்க. வழக்கு - (உலகத்தாரால்) வழங்கப்படுவது - (உலக) வழக்கு.

[அந்த மலைச்சாரலிலே மரங்களின் அருகே சென்று, பன்னிறமணிகள் இழைத்த ஆபரணங்களணிந்த மாதர்கள் அம் மரங்களின் பல வருணப்பூப்பூத்த கொம்புகள் போன்முர். பளிங்குப் பாறையிலே தன் உருத் தோன்றும்படி ஒரு மாது படுத்துறங்க, அவளைத் தேடிவந்த அவளுடைய தோழிகள் அவளுடைய இரண்டுருவங்களைக்கண்டு திகைத்தார்கள்.]

170. மிதிக்க நிமிர் தூளியின் விளக்கம் அறு மெய்யைச்
சுதைக்க ணுரை யைப் பொருவு தூசுகொடு தூசை
உதிர்த்தனர், இளங்குமரர், ஓவியரின் ஓவம்
புதுக்கின ரெனத், தருண மங்கையர் பொலிந்தார்.

இ - ள். சித்திரிகர் இனிய சித்திரங்களைப் புதுப்பிப்பவர்போல, காளையர்கள், (ஆள்கள் குதிரைகள் ஆனைகள்) மிதிக்க எழுந்த தூசினுல் பொலிவற்ற (தம் காதலிகளின்) மேனியினின்று (அந்த நுண்) தூசுகளைப் பால்நுரைபோன்ற (வெண்) தூசுகொண்டு (துடைத்து) உதிர்த்தார்கள். (அந்த) இள மங்கையர்கள் (புதுப்பிக்கப்பட்ட சித்திரம்போல) விளங்கினுர்கள்.

தூளி - தூள். சுதை - பால். தூசு - தூள்; ஆடை. ஓவியர் - சித்திரகாரர். இன் - இனிய. ஓவம் - சித்திரம். தருணம் - இளமை.

'தூசுகொடுதூய்தா' என்றும் பாடம். 'மெய்யைத் தூசுகொடு தூசை உதிர்த்தனர்' என்பதற்கு 'மெய்யினின்றும் தூசைத் தூசு கொண்டு உதிர்த்தனர்' என்று பொருள்கொள்க. 'மெய்யினின்றும்' எனற்பாலது 'மெய்யை' என வந்தது, "யாதனுருபிற் கூறிற்ருயினும்-பொருள்செல் மருங்கின் வேற்றுமைசாரும்" (நன்னூல்) என்பதனுல் என்க. 'மெய்யைத் தூசுகொடு தூய்தா உதிர்த்தனர்' என்ற பாடத்துக்குப் பொருள்கூறுங்கால் 'தூள் உதிர்த்தனர்' என்று 'தூள்' என்ற பதத்தை அவாய்நிலையாகக் கொள்க.

'ஓவியர் இன் ஓவம் புதுக்கினரென இளங்குமரர், மிதிக்க நிமிர் தூளியின் விளக்கம் அறும் [தருணமங்கையர்] மெய்யைச் சுதைக்கண் நுரையைப்பொருவு தூசுகொடு தூசை உதிர்த்தனர்: தருணமங்கையர் பொலிந்தார்' எனக் கூட்டிப் பொருள்செய்யப்பட்டதுகாண்க. 'புதுக்கின

ரென' என்றில்லாமல் 'புதுக்கினவென' என்று பாடமுளதாயின், 'இளங்குமரர் [தருணமங்கையர்] மெய்த்தூசை, [சித்திரத்தூசைத் துடைத்து உதிர்க்கும்] ஓவியரின் (- சித்திரகாரர்போல), உதிர்த்தனர்: ஓவம் (-சித்திரங்கள்) புதுக்கினவென (-புதுக்கப்பட்டனபோல)த் தருணமங்கையர் பொலிந்தார்' என்றுகூட்டிப் பொருள்கொள்ளலாம்.

[மலையினின்று இறங்கும் சிங்க ஏறுகள் போல, அரசர் யானையினின்று இறங்கி அந்தச் சிங்க ஏறுகள் குகைகளுள் நுழைதல்போலக் கூடாரங்களினுள்ளே குடிபுகுந்தார்கள். தம்மேற் படிந்த புழுதியை உடல் குலுக்கி உதறியெறிந்த குதிரைகள், தம்மைச் சேர்ந்த தீயோரைத் தீயோரெனத்தெரிந்தமாத்திரையே விலக்கித் தள்ளிவிட்ட தூயோர் போல விளங்கின. திரைச்சீலைகள் அலையும் கூடாரங்களிலே, கழங்காடும் மங்கையர்கண்கள், கழங்குகள் செல்வழி ஓடித் திரும்பி மிளிர்கின்றவை, திரையலையும் தடாகங்களில் (இரைதேடி யோடிப்) பிறழ்ந்து பிரகாசிக்கின்ற மீன்கள் போன்றன. சேனையைக் காணுதற்குவந்த தேவலோகவாசிகள் தம்மவர்களையும் சேனையிலுள்ளாரையும் பகுத்தறியமாட்டாமல் திகைப்புறும்படியிருந்ததனால், மைந்தர் மகளிரோடு பொலிந்த அந்த மலைச்சாரல், தேவர் தேவமாதரோடு தேவலோகம் வழுக்கி மண்ணில் விழுந்து விளங்கினாற்போன்றிருந்தது. மாதர்கள் கூவும் குயில்களினோடு பேசியும் எதிரொலியொலிக்கு மலையொடு கூவி எதிரொலிகேட்டும் உவந்து மயில்கள்போல உலாவித் திரிந்தார்கள். மைந்தர்கள் காலில் வீரக்கழல்கள் சத்திக்க, மாலையிலே வண்டுகள் ஒலிக்க, பக்கத்திலே வாள் விளங்க, தோளில் வாகுவலயம் துளங்க, அந்தத் தோள்போலும் மலைக்காட்சிகளைக் காண்பாராய்த் திரிந்தார்கள்].

171\. குப்புறற் கருமை யால் அக் குலவரைச் சாரல் வைகி
ஒப்புறத் துளங்கு கின்ற உடுபதி ஆடி யின்கண்,
இப்புறத் தேயும் காண்பர் குறத்தியர், இயைந்த கோலம்;
அப்புறத் தேயும் காண்பர் அரம்பையர் அழகு மாதோ.

இ - ள். (அந்த மலை மிக உயர்ந்து) கடத்தற்கு அருமையாயிருத்தலால் (கடக்கமாட்டாமல்) அந்த மலைப்பக்கத்திலேதானே தங்கி (முன்னும் பின்னும்) ஒப்ப விளங்குகின்ற சந்திரனாகிய கண்ணாடியிலே

(அதன் பூமியை நோக்கிய) இந்தப் பக்கத்திலே குறத்தியர் (தமது) அழகை நோக்குவார்கள்; (அதன் வானை நோக்கிய மறுபுறமாகிய] அந்தப் பக்கத்திலே அரம்பையர் (தமது) அழகை நோக்குவார்கள்.

குப்புறல்—கடத்தல். ஒப்புறத் துளங்குகின்ற உடுபதி ஆடி—1. (முகம்பார்க்கும் கண்ணாடி ஒருபக்கமே விளக்கமாயிருக்கும்; அதுபோலன்றி இருபக்கமும்) ஒன்றுபோல விளக்கமாயிருக்கும் சந்திரனாகிய கண்ணாடி; 2. (நம்மைக் கண்ணாடியென்று நம்பால் தம் அழகைப் பார்க்கின்ற மாதர் முகத்துக்கு) ஒப்பு உற (நாம் தகுதியில்லேமேயென்று அஞ்சி) நடுங்குகின்ற சந்திரனாகிய கண்ணாடி. துளங்குதல்—விளங்குதல்; நடுங்குதல். ஆடி—கண்ணாடி. கோலம்—அழகு.

சந்திரசைலத் துச்சியைச் சந்திரன் கடக்கமாட்டாமல் அம்மலைப் பக்கத்திலே தானே தங்கியென்றதனால், (அம்மலையின்பெயர்க்காரணம் கூறினார்போலுமென்று ஓர்நினைவெழச்செய்து) அம்மலையின் மிக்க உயர்ச்சியைக் குறிப்பித்தார்: அவ்வாறு குறிப்பித்தவர் அம்மட்டிலே நில்லாமல், சந்திரனை மிகப் பொருத்தமாகக் கண்ணாடியாக உருவகித்து, அவ்வளவிலும் அமையாமல் மற்றைக்கண்ணாடிகள் போலன்றி அவ்வுருவகக் கண்ணாடி இருபக்கமும் முகம்பார்க்குந்தன்மையுடைமையை ஏதுவாகக்கொண்டு, தம் பாவனாசத்தியால், அதன் ஒரு புறத்தில் மலைநாடியரும் மறுபுறத்தில் வானநாடியரும் தத்தம் அழகு காண்பார்களென்று அதிசயமும் ஆநந்தமும் விளையக்கூறிய நயம் பாராட்டற்பாலது.

[மலைவளங் காணும் மாதர் ஒரு சுனையைப் படிகத்தளமென்று மயங்கி விரைந்துசென்று இறங்க, அவர் சேலை நனையக்கண்ட மைந்தர்கள் கைகொட்டிச் சிரித்தார்கள்.

பல இடங்களில் உள்ள மலர்களைத் தேடியுற்றுக் கள்ளுண்டு களிக்கும் ஆண்வண்டுகள் பெண்வண்டுகள்போல, அம்மலையின் பல இடத்து வளங்களையும் நாடிச்சென்று கண்டு மைந்தரும் மகளிரும் களித்தார்கள்.

சுவர்க்கத்தை அடைந்தவர்கள்போல, மலைமேலுற்றவர்கள் பூமியில் இறங்க மனமில்லாராய்க் களித்துக்கொண்டிருக்கும்போது, மாலைக் காலம் வந்தது.

அப்போது, அத்தமனகிரி ஆனையை ஒத்தது; அதனை அடைந்த சூரியன், அந்த ஆனைமேற்பாய்ந்த சிங்கத்தை ஒத்தது; செவ்வானம், சிங்கம் யானைமேற் பாயப் பொங்கிய இரத்தப்பிரவாகத்தை ஒத்தது. அப்படிப்பட்ட மாலைநேரம் கழியும்பொழுது, அம் மலைமே லேறியிருந்தவர்கள், கீழே யிறங்கினார்கள்.

கிரணக்கற்றைப் பிடரிமயிரையுடைய சூரியச்சிங்கம் அத்தமனகிரியிற்புகுந்து மறையவே, அதுவரை ஒதுங்கிப் பதுங்கி ஒளித்திருந்த யானைக்கூட்டம்போல இருள்வந்து எங்கும் பரந்தது.

தீபங்கள் எங்கும் ஏற்றப்பெற்ற சேனைக்கடல், செந்தாமரைநிறையப்பூத்த தெண்ணீர்க்கடல்போல விளங்கியது.

சந்திரன் தோன்றி எங்கும்பாவிய நிலாவினிடையே, நட்சத்திரங்களினூடே செல்லாநின்ற காட்சி, வெண்மணற்பரப்பிலே தன்னினனப்பட்டுச் சூழச் சிதறுண்டுகிடக்கும் முத்துக்கள் மத்தியிலே வெண்சங்கம் ஊராநின்ற தோற்றம்போன்றது.

மீனக்கடல் ஒரு சந்திரனை யீன்றதென்று சேனைக்கடல் எண்ணிலாத சந்திரன்களை யீன்றதென்னும்படி, சேனையிலே அளவிறந்த மாதர்களின் முகமதிகள் பொலிந்தன.

நடனமாதர் நடிக்க, அதற்கியைய மத்தளிகர் மத்தளம்கொட்ட, தாளகாரர் தாளம் தட்ட, பாடகர் பாட்டுப்பாட, யாழ்ப்பாணர் யாழ் இசைக்க, வேய்ங்குழல் ஊதுவோர் ஊத, எல்லா இனிய ஓசையும் ஒன்றுக்கொன்று முரணுதலின்றி ஒற்றுமைப்பட்டுக் கூடித் தேவரும் மயங்கும்படி விம்மி ஒலித்தன.

வாயினல் உண்ணமுடியாத அருங்கலை அமிழ்தைக் காதினல் உண்டும், மாதர்களது ஆடலைக்கண்டும் பாடலைக்கேட்டும் ஊடலைத்தீர்த்தும் மைந்தர்களுக்கு இரவு கழிந்தது.]

பூக் கொய் படலம்.

172\. மீன் உடை எயிற்றுக் கங்குற் கனகனை வெகுண்டு, வெய்ய
தான் உடைக் கதிர்க ளென்னும் ஆயிரங் கரங்க ளோச்சித்,
தான் உடை உதய மென்னும் தமனியத் தறியுள் நின்று
மான் உடை மடங்க லென்னத் தோன்றினன் வயங்கு வெய்யோன்.

இ - ள். விண்மீன்களாகிய பற்களையுடைய இரவாகிய இரணியனைக் கோபித்துக் கிரணக்கைகளைநீட்டி உதயகிரியாகிய தூணினின்று நரசிங்கம் (தோன்றியது) போலச் சூரியன் உதயமானது.

மீன் - விண்மீன் - நட்சத்திரம். மீன் உடை எயிற்றுக் கங்குற் கனகன் - நட்சத்திரங்களைத் தன்னுடைய பற்களாக உடைய இரவாகிய இரணியன். கான் - காடு - அடர்ச்சி. தான் உடை - தன்னுடைய. 'யான் உடை' என்னுடைய என்ற பொருளில் பாசப் படலம் சகூ-பாட்டில் வருதல் காண்க. உதயம், உதயகிரியை உணர்த்தி நின்றது. தறி - தூண்.

[பின்பு சேனை புறப்பட்டுச் சோணையாற்றைச் சேர்ந்தது. அப்போது உச்சிப்பொழுதாயிற்று. பூக் கொய்யவும் நீராடவும் விரும்பி மாதர்களும் மைந்தர்களும் தடாகங்கள் மலிந்த ஒரு சோலையைச் சேர்ந்தார்கள்.

மாதர்கள் தங்கள் புருவங்கள் விற்களாகக் கண்கள் அம்புகளாகத், தம்மை எய்வாரென்று பயந்தனபோல மயில்களும், அவர் வாய்ச்சொற் கேட்டு நாணினபோலக் கிளிகளும், அவர்கள் நடையழகுகண்டு ஒதுங்கினபோல அன்னங்களும் அவர்களைக்கண்டு விலகிப்போயின.

அடிமுதல் முடியளவும் (பன்னிற மணி) அணிகள் அணிந்த மாதர்களின் கூட்டம் (களிப்பால்) ஆடுதல், (பன்னிற மலர்கள்) நிறையப்பூத்த கொம்புகளின் கூட்டம் (காற்றால்) ஆடுதலை ஒப்ப, (தூரத்தே நின்று கண்ட) மைந்தர்கள் இருகூட்டத்துக்கும் பேதந்தெரியாமல் மயங்கினார்கள்.

குயில்கள் அகல்வன, மாதர்களின் ஆரவாரத்திற்கு அஞ்சியன்று, அவர் பேச்சுக்கு எதிர்பேச நாணியே: "வாசகம் வல்லார் முன்னின்று யாவர்வாய் திறக்க வல்லார்?"

மாதர்கள் இனிதாக நோக்கிக் கையால் தீண்டவே, (உணர்ச்சியில்லாத) கொம்புகளே தாழ்ந்து அவர்கள் பாதங்களில் மலர் சொரிந்து வணங்கினவென்றால், அவர்களுக்கு (வசிப்பட்டு) வணங்காதவருண்டோ?

மாதர்கள் தீண்ட மைந்தர்கள் புய மலைகள் தாழுமானால், அவர்கள் தீண்டக் கோம்புகள் தாழ்தல் ஆச்சரியமாமோ ?]

173. நதியினும் குளத்தும் பூவா நளினங்கள் குவளை யோடு
மதிநுதல் வல்லி பூப்ப நோக்கிய மாலைத் தும்பி
அதிசயம் எய்திப் புக்கு வீழ்ந்தன ; அலைக்கப் போகா:
புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார்?

இ - ள். (மாதராகிய) கொடிகள் ஆறுகளிலும் குளங்களிலும் அலராத (முகங்கள் கண்க ளாகிய) தாமரையும் நீலோற்பலமும் பூத்திருக்கக் கண்ட வண்டுகள் அதிசயமுற்று (அவைகளில்) விழுந்(து மொய்த்)தன; (அவைகள் நீங்கும்படி) அலைக்க (நீங்கிப் போகா (வாய்த் தங்கி மொய்த்துக்கொண்டிருந்தன) : புதுமை (யானபொருள்களை விருப்போடு) காண்போர் அவைகளைக் கண்டால் விட்டுப்போவாரோ ?

மதிநுதல்வல்லி—பிறைபோலும் நெற்றியை உடையகொடி (களாகிய பெண்கள்). மாலை—ஒழுங்கு; வரிசை.

ஒரேகொடியிலே தாமரைகுவளையாகிய இருசாதிப் பூக்கள் பூத்திருத்தல் புதுமையென்பது குறிக்க 'அதிசயமெய்தி' என்றார். 'நளினங்கள் குவளையோடு வல்லி பூப்ப' என்றதற்கு (க் கண்களோடு கூடிய முகங்கள் போல)க் குவளைகளோடு (கூடிய) தாமரைகளைக் கொடிகள் பூக்க என்று பொருள்செய்து நீலமலர்கள் தம்மேல் மலரப்பெற்ற தாமரைமலர்களைக் கொடிகள் பூத்திருத்தல் புதுமையென்பது குறிக்க 'அதிசயமெய்தி' யென்றாரெனலுமாம்.

இது மாதரது தாமரைமலர்போலும் முகத்தில் நீலமலர்போலும் கண்கள் விளங்குதலை உட்கொண்டு "முண்டகத்தின்மீது முழுநீலம் பூத்திருக்கக் கண்டதுண்டு கேட்டதில்லை காண்" என்ற சமுத்தியை நினைவுறுத்துகின்றது. (சமுத்தி - பாடும்படி எதிரிகொடுக்கும் உள்ளுறைவசனம்.)

[பூங்கொம்புகளில் ஆடவர்களுக்கு எட்டியவை இணங்கிய மாதரையும் எட்டாதவை பிணங்கிய மாதரையும் போன்றன.]

தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

அறியவேண்டிய சில பழங்கதைகள்.

(உக-ஆம் தோகுதியின் ௫எஉ-ஆம் பக்கத்தொடர்ச்சி).

உ. வன்றொண்டர் கோயில்.

புள்ளிருக்குவேளூரென்ற வைத்தீசுரன்கோயிலுக்கு மேற்கில் சுமார் ஒருமைல்தூரத்திற் பெருமங்கலம் என்று ஒரு ஊருண்டு. அதற்கு நேர்தெற்கிற் சாலைக்குவடக்கே ஒரு சிறுகோயிலும் அதன் வடபாரிசமாக நான்குவீடுகளும் இருக்கின்றன. இவ்வாலயமுள்ள இடத்தைச் சிறிது கற்றவர்களும் விறன்மிண்டர்கோயில் என வழங்குகிறார்கள். எழுத்துவாசனை யறியாதவர்களோ இதனை வெறுமுண்டர்கோயில் என்கின்றனர். இதன் உண்மைகாணும்பொருட்டு யான் சில நாட்களுக்குமுன் அங்குச்சென்று கோயிலினுட்புகுந்து பார்த்தபோது, ஒரு இலிங்கமும் அதனைச்சார்ந்து பக்கத்திற் குவிகையினராய அடிகள் உருவமொன்றும் இருக்கக்கண்டு, அவற்றின்வரலாறென்னவென்று அக்கோயிற்பூசகரைக்கேட்க, அவர், தமக்கொன்றுந்தெரியாதென்றும், பெருமங்கலத்தில் வசிக்கும் தனிகராகிய அக்கோயிற் கண்காணியைக் கண்டுசாவினால் தெரிந்துகொள்ளலாமென்றுந் தெரிவித்தார். பின்பு, யான், நீடுவண்புகழ்ச்சோழர் நீர்நாட்டிடை முற்காலத்தே ஆடுபூங்கொடிசேர் நீடியநகராயிருந்து இப்பொழுது சிற்றூராகவிருக்கும் பெருமங்கலஞ்சென்று அத்தனிகரையடுத்துக் கேட்டபோது, அவர்,

> "மங்கலஞ்சேரேயர்கோன்மானுங்கலிக்காம
> ரங்கணரைத்தூதேவுமாரூரர்—தங்கணுற
> ஆவிதுறந்தவராலாவிபெற்றுநண்பராய்
> மேவுசிவமானவிதிபோற்றி"

என்பதைச்சுட்டி, இக்கோயில், வன்றொண்டர் ஏயர்கோன்கலிக்காமநாயனாரிடம் வந்தபோது, தங்கிச் சிவபூசைசெய்ததலமென்றும், கங்கைவாழ்முடியார்பக்கத்தேயிருப்பது வன்றொண்டர்திருவுருவமென்றும், இதற்கு வன்றொண்டர்கோயில் என்று பெயர் என்றும் கூறினார்கள். அவ்வூரையும், அஃது இருக்குநேர்மையையும் நோக்கியபோது,

அரும்பொற் கலத்தி லாரமு தருந்தினர்
கருங்கல வோட்டிற் காடியேற் றுண்ணவும்
பழுதில் பொற்றுகில் பன்முறை யுடுத்தோ
ரிழையிழை யவிழ்துகி லிசைத்திசைத் துடுக்கவும்
பளிதச் சாந்தம் பனிநீ ரணிந்தோர்
வெளிமட் பூழி வேர்வையிற் பூசவுந்
தந்தக் கட்டிலிற் றளிரணைத் துயின்றோர்
சந்தியம் பலத்திற் றடங்கையிற் றுயிலவு
மதக்கரி நெடுந்தேர் வாம்பரி யூர்ந்தோர்
பதத்தழற் பாலைப் பாற்றனி செல்லவு
முரசுமுன் றிரட்டு முழுமணி முன்றி
லுரைசெய் முட்டுறு வோரிகூண் டோலிப்பவு
மொற்றை வெண்குடை யரசுறு மத்தாணி
முற்றெருக் கெழுந்து முதுமுரம் பாகவுங்
கண்டு மானிடர் காமுறு செல்வ
முண்டெனக் கருதுவ தோழிநீ மனனே.

என்பது ஞாபகம் வந்தது. கடவுளவனே தீராச்செல்வத் திருவுடையா னென வழுத்தி யூர் திரும்பினேன்.

இலக்கணவிளக்கம் வைத்தியநாததேசிகர் பாம்பரை,

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

இளங்கீரன்.

எயினந்தைமகன் இளங்கீரன் என்ற பெயருடையவரும் இவரே. வினைவயிற்பிரியுந் தலைவன் இடைச்சுரத்து நெஞ்சழுங்கலும், இல்விடையழுங்கலும் ஆகிய பலவேறுதுறைகளை அமைத்துப் பாலைத்திணையைச் சுவைபடக்கூறும் ஆற்றலுடையார். இவர் வேட்டுவர்குலத்தினர் எனக் கருதுவர். எயின் + தந்தை = எயினந்தை—அவர்மகன் இளங்கீரன் என்க. அகத்தில் [239] தலைவி பிறைதொழுதேத்தலைக் குறிக்கின்றார். மருதத்திணையில் அமையவேண்டிய கருப்பொருள்சிறந்த நற்றிணை 269 ம். பாட்டைப் பாலைத்திணையில் அமைத்துப்பாடுதல் நோக்கத்தக்கதொன்றும். இவர் வாக்கில் அமைந்த,

"ஈர்மட்செய்கைநீர்படுபசுங்கலம்
பெருமழைப்பெயற்கேற்றாங்கு" [308-9-10 அடி.]

என்ற அடிகள் "பசுமட்கலத்துள் நீர்பெய்திரீஇயற்று" என்ற குறளை [வினைத்தூய்மை. 10] நினைப்பூட்டுகின்றன.

வேள்விக்குண்டத்தின்கீழ் யாமையை வைத்துமூடும் வழக்கினைக் கூறுவார் இவரே [அகம். 361]. பல்லியடிப்பது நல்வாக்கு எனக் கொண்டு தலைவிவேண்டுவதாகக் கூறியது நோக்கத்தக்கது [அகம். 289]. பொறையனது கொல்லிமலையை [நற்றிணை. 346] ப் பாராட்டியுள்ளார்.

இவர் பாடியனவாக நற்றிணையில் மேற்காட்டிய மூன்றும் அகத்தில் ஒன்பதும் [3, 225, 239, 289, 299, 361, 371, 395, 399] கிடைக்கின்றன.

உ

செய்யுட்பொருத்த விலக்கணம்.

இது, செய்யுளுக்குரிய பத்துவகைப்பொருத்தத்தை யுணர்த்துகின்றது. பழந்தமிழ்நூல்கள் செல்லின்வாய்ப்பட் டழிந்துபோகாமலவைகளைப் போற்றவேண்டுமென்னும் நோக்கங்கொண்டுள்ளேன். ஆதலால் ஒருபழைய ஏட்டுப்பிரதியிலிருந்த இந்நூலை எனது சிற்றறிவுக்கெட்டியவரை ஆராய்ந்து வெளியிடுகின்றேன். சிற்றறிவுடையேனாயிருந்தாலும் எனது முயற்சி தமிழ்முயற்சியாயிருத்தலின், செந்தமிழறிஞர்கள் இதனையும் அங்கீகரித்து இன்னும் பலபனுவல்களையும் வெளியிடும்வண்ணம் என்னை ஊக்கப்படுத்துவார்களென்பது எனது நம்பிக்கை.

நூல்.

பொருத்தவியல்.

1. முதன்மொழிப்பொருத்தம்மொழிந்திடுங்காலை
மங்கலஞ்சொல்லெழுத்துத்தானம்பாலுணாக்
கங்கில்வருணநாட்கதிகணமீரைந்தே.

செய்யுட்கெல்லாம் பொதுவாய்ச் சில விலக்கணங்களை யுணர்த்துவான்றொடங்கினூ. செய்யுட்கெல்லாம் முன்மொழியிடத்துப் பல்

வகைப்பொருத்தம் வேண்டுவதாகவிதித்தார் முன்னோர். அவையே மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணா, வருணம், நாள், கதி, கணம் எனப் பத்துவகைப்படும்.

பகர்செய்யுண்மங்கலஞ்சொல்லெழுத்துத்தானம்
பாலுண்டிவருணநாட்கதியேயென்றுப்
புகரில்கணமெனப்பத்தும்பிறங்குகேள்விப்
புலவர்புகழ்முதன்மொழிக்குப்புகல்வர்செம்பொற்
சிகரகிரியெனப்பணைத்துப்புடைத்துவிம்மித்
திரண்டெழுந்துவளர்ந்திளகிச்செறிந்தகொங்கைத்
தகரமலர்க்குழற்கருங்கட்குமுதச்செவ்வாய்ச்
சரிவளைக்கைக்கொடியென்னத்தபங்குமாதே.

என்பது மேற்கோள்.

மங்கலப்பொருத்தம்.

2. மங்கலப்பொருத்தமேகங்கைமலைநிலம்
கார்புயல்பொன்மணிகடல்சொற்கரிபரி
சீர்புகழெழுத்தலர்திங்கடினகரன்
றேர்வயலமுதந்திருவுலகாரண
நீர்பிறவருமுதனிலைச்சொலியல்பே.

(இ - ள்). கங்கை, மலை, நிலம், கார், புயல், பொன், மணி, கடல், சொல், கரி, பரி, சீர், புகழ், எழுத்து, அலர், திங்கள், தினகரன், தேர், வயல், அமுதம், திரு, உலகு, ஆரணம், நீர் என்று சொல்லப்படுகின்ற இருபத்துநாற்சொல்லு மித்தொடக்கத்தன பிறவும் மங்கலச்சொல்லெனவும் செய்யுண்முதற்சொல்லெனவும் பெறும். பிறவென்றமிகையால் ஈண்டுக் குறிக்கப்பட்டவற்றின் றிரிசொல்லெல்லா மேற்கு மென்றுணர்க.

கங்கையென்பதற்கு மந்தாகினி, சுரநதி, சானவி, பகீரதி யென்பனவு மேற்கும். இவ்வகைச்சொல்லினொன்றே முதற்சொல்லாக வினையாதாயின் மங்கலச்சொல் வழுவெனப்படும்.

அங்ஙனம் கம்பர் "உலகம்யாவையுந் தாமுளவாக்கலும்" என்றார். திருவள்ளுவர் "அகரமுதல வெழுத்தெல்லாம்" என்றார். பிறவுமன்ன.

ஆயினும் அச்சொற் றுமேவாராமல் அவற்றவற்றடுக்கிய பல அடைமொழியேவரினும் ஏற்குமென்றுணர்க. சிந்தாமணியில் "மூவா முதலாவுலக" மெனவும், நைடதத்துள் மழை முதல்வாராமற் "கருவி மாமழை" எனவும் முதற்சொல்லாக மங்கலச்சொற் கடைமொழியே வந்தவாறு காண்க.

மே—ள். "மாமணிதேர்புகழமுதமெழுத்துக்கங்கை
மதிபரிதிகளிறுபரியுலகஞ்சீர்நாட்
பூமலைகர்திருக்கடனீர்பழனம்பார்சொற்
பொன்றிகிரிபிறவுமுதன் மொழிச்சீர்க்காகு
நாமவகையுளிசேர்தல்பொருளதின்மை
நலமிலதாய்வைத்தல்பலபொருளாய்த்தோன்ற
லாமினியசொல்லீறுதிரிதல்போல்வ
வாதிமொழிக்காகாவானந்தமாமே."

3. சொல்லின்பொருத்தஞ்சொல்லுங்காலை
யரிதுணர்சொல்லுமருந்திரிசொல்லுந்
திரிபுடைச்சீருந்தீதாமுதற்கே.

சொற்பொருத்தமாமாறுணர்த்துதும். செய்யுண்முதற்கண் மங்கலச்சொல்லேவரினும் கற்றவரானு மெளிதிற்புலப்படாச்சொல்லும் ஐயமாகப் பலபொருள்குறித்த வரிய பயன்றிரிசொல்லும் முதற்சீரீற்றெழுத்துச் சந்திவகையாற்றிரிந்தசொல்லு முடையசீர் முதற்கண்வரின் வழுவாமெனக்கொள்க.

வரலாறு:— சீரிமருவுந்திருநிழற்சோலையென்பதில் அரி என்னுஞ் சொல் சிங்கமோ, வண்டோ, பன்றியோவென்றுதோன்றுமையத்தாலாகா. கடறவ பூலகம் எனினுந் தேநருடீசிதருமெனினு மீற்றுத்திரிபினாலாகா.

"வகையுளிசேர்தல்வனப்பின்றாய்நிற்ற
றொகையார்பொருள்பலவாய்த்தோன்ற—றகையில்
பொருளின்மையீறுதிரிதலேபோல்வ
தருமுதற்சீர்ச்சொற்காகுந்தப்பு.

என்பதுமேற்கோள். பிறவுமன்ன.

(இன்னும்வரும்)

ந. பத்மாசனி அம்மாள்.

பிழையுந் திருத்தமும்.

சமீபத்தில் வெளிவந்துள்ள **திருவள்ளுவர் நூல்நயம்** என்ற புத்தகத்தில் திருவள்ளுவரும் பரிமேலழகரும் என்ற பகுதியில், "கேட்டார்ப்பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்—வேட்ப மொழிவதாஞ் சொல்" என்றதற்குப் பரிமேலழகர் சிதைத்துப்பொருள்கொண்டார் என்றுகூறி, 'கருதியவினை முடியுமாற்றால் வார்த்தைசொல்ல வல்லனாதல்' என்ற பொருளுடைய 'சொல்வன்மை' யென்ற அதிகாரத்திற்குப் பொருத்தமாக உரையாசிரியர்கொண்டபொருளைப் போற்றாமலும், கேட்டார் என்னும் இறந்தகாலவினையாலணையும்பெயர் தாம் கொள்ளும் பொருளுக்கு மாறுபட்டிருப்பதை யறியாமலும் பிறிதோருரையுங் கூறப்பட்டிருக்கிறது. அன்றியும், 'பரிமேலழகர் கேட்டார் என்பதினைக் கேள் + தார் என்று பிரித்துக் கேண்மையுடையவர் அல்லது நட்பாளர் என்று பொருள்கொண்டு அவ்வாறே கேளார் என்னும் பதத்திற்குப் பகைவர் என்று வலிந்து பொருளுரைத்தார்' என்றுங்கூறப்பட்டிருக்கிறது. அவர் அவ்வாறு கொள்ளவில்லையென்று காட்டுகிறேன். கேட்டார் கேளார் என்பன கேள் என்ற பண்படியாகப்பிறந்து, கேண்மையுடையவர் பகைவர் என்ற செம்பொருள்கொண்டு நிற்பன வென்று பரிமேலழகர் கருதவில்லை; கேள் என்னும் வினையடியாகப்பிறந்த வினையாலணையும் பெயராகவும், ஏற்றுக்கொண்டார் ஏற்றுக்கொள்ளாதார் (ஒப்புக்கொண்டார் ஒப்புக்கொள்ளாதார்) என்ற செம்பொருள்பட்டு நிற்பனவாகவுமே அவற்றைக் கருதினர். இச்சொற்கள் இப்பொருளில் இருவழக்கினும்பயின்று வருதல் தமிழறிஞர் யாவரு மறிந்ததே. இக்குறளின் பதவுரையில் நட்பாய் பகையாய் என வந்துள்ளவை, ஏற்றுக்கொண்டார், ஏற்றுக்கொள்ளாதார் என்பவற்றிற்கேற்ப வருவித்த சொற்களேயாம். அன்றியும், கேண்மையுடையார் பகைவர் என்றபொருளில் உடன்பாடும் எதிர்மறையும்பற்றிக் கேளென்ற பண்படி பலர்பாலில் கேளிர் கேளலார் என வருதலன்றிக் கேட்டார் கேளார் என வருமாறில்லையென்பது பரிமேலழகருக்கு நன்கு புலப்படுவதாம்.

இனி, இக்குறள்சம்பந்தமான ஒருமைப்பன்மைமயக்கத்திற்கு உதாரணமாக அங்கு "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு, நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" என்ற குறள் காட்டப்பட்டது. அக்குறளில் அம்மயக்கமின்மை அதனுரைநோக்கித் தெளிக.

ஸத்தியவாகீசுவரையர்,
தமிழ்ப்பண்டிதர், திருவநந்தபுரம்.

புத்தபகவான்.

184. அரியேறு முன்னுயர்த்த வாதியான் வண்டின்
புரியேறும் போதி நிழற்கீழ்ப்—பெரியோன்
அடித்தா மரைமலரை யன்போடுஞ் சென்று
பிடித்தார் பிறவார் பெயர்ந்து.

185. வடிமலர்த்தார் நாகர் மணிக்கவரி வீச
முடிமலர்த்தேம் போதிமையோர் தன்னடிக்கீழ்ப் பெய்ய
இனிதிருந்து நல்லறஞ் சொல்லியா னெல்லாத்
துனியிருந்த துன்பந்தீர்ப் பான்.

(வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா.)

186. திருமேவு பதுமஞ்சேர் திசைமுகனே முதலாக
உருமேவி யவதரித்த வுயிரனைத்து முயக்கொள்வான்
இவ்வுலகுங் கீழுலகு மிசையுலகு மிருணீங்க
எவ்வுலகுந் தொழுதேத்த வெழுந்தசெழுஞ் சுடரென்ன
விலங்குகதி ரோரிரண்டும் விலங்கிவலங் கொண்டுலவ
அலங்குசினைப் போதிநிழ லறமமர்ந்த பெரியோய்நீ! (தரவு)

மேருகிரி யிரண்டாகு மெனப்பணைத்த விருபுயங்கண்
மாரனிதை யாவேட்டு மன்னுபுர மறுத்தனையே;

வேண்டினர்க்கு வேண்டினவே யளிப்பனென மேலைநாட்
பூண்டவரு ளாளநின் புகழ்புதிதாய்க் காட்டாதோ;

உலகுமிக மனக்தளர்வுற் றுயர்நெறியோர் நெறியழுங்கப்
புலவுநசைப் பெருஞ்சினத்துப் புலிக்குடம்பு கொடுத்தனையே;

பூதலத்து ளெவ்வுயிர்க்கும் பொதுவாய திருமேனி
மாதவநீ யென்பதற்கோர் மறுதலையாக் காட்டாதோ;

கழலடைந்த வுலகனைத்து மாயிரவாய்க் கடும்பாந்தள்
அழலடைந்த பணத்திடையிட் டன்றுதலை யேறினையே;

மருள்பாரா வதமொன்றே வாழ்விக்கக் கருதியநின்
அருள்பாரா வதவுயிர்க ளனைத்திற்கு மொன்றுமோ; (தாழிசை)

அருவினை சிலகெட வொருபெரு நரகிடை
எரிசுடர் மரைமல ரெனவிடு மடியினை;

அகலிட முழுவது மழல்கெட வமிழ்தமிழ்
முகில்புரி யிமிழிசை நிகர்தரு மொழியினை; (அராகம்)

(184) மணி. பதி. இறுதி. (185) யாப். வி. 61. (186) வீரசோ. யாப். 11. உரை.

அன்பென்கோ வொப்புரவென் கோவொருவ னயில்கொண்டு
முந்திவிழித் தெறியப்பால் போந்தமுழுக் கருணையை;

நாணென்கோ நாகமென்கோ நன்றியில்லான் பூணும்
தீயினைப் பாய்படுத்த சிறுதுயில்கொண் டருளினை;
(ஈரடி இரண்டம்போதரங்கம்)

கைந்நாகத் தார்க்காழி கைக்கொண் டளித்தனையே;
பைந்நாகர் குலமுய்ய வாயமிழ்தம் பகர்ந்தனையே;
இரந்தேற்ற படையரக்கர்க் கிழிகுருதி பொழிந்தனையே;
பரந்தேற்ற மற்றவர்க்குப் படருநெறி மொழிந்தனையே;
(ஓரடி நான்கம்போதரங்கம்)

எனவாங்கு, (தனிச்சொல்)

அருள்வீற் றிருந்த திருநிழற் போதி
முழுதுணர் முனிவநிற் பரவுதுந் தொழுதக
ஒருமன மெய்தி யிருவினைப் பிணிவிட்டு
முப்பகை கடந்து நால்வகைப் பொருளுணர்ந்
தோங்குசீ ருலகிடை யாவரும்
நீங்கா வின்பமொடு நீடுவாழ் கெனவே. (சுரிதகம்)

187. பூமகனே முதலாகப் புருந்தமர ரெண்டிசையும்
தூமலரா லடிமலரைத் தொழுதிரந்து வினவியநாட்
காமமுங் கடுஞ்சினமுங் கழிப்பரிய மயக்கமுமாய்த்
தீமைசால் கட்டினுக்குத் திறற்கருவி யாய்க்கிடந்த
நாமஞ்சார் நமர்களுக்கு நயப்படமொ றினிதுரைத்துச்
சேமஞ்சார் நன்னெறிக்குச் செல்லுமா றருளினையே; (ஆறடித்தாவு)

தானமே முதலாகத் தசபார [1]நிறைத்தருளி
யூனமொன் றில்லாமை யொழிவின்றி யியற்றினையே;

எண்பத்தொன் பதுசித்தி யியல்பினு ளுளவென்று
பண்பொத்த நுண்பொருளைப் பாரறியப் பகர்ந்தனையே;

துப்பியன்ற குணத்தோடு தொழில்களால் வேறுபட
முப்பதின்மே லிரண்டுகலை முறைமையான் மொழிந்தனையே;
(இரண்டடி மூன்று தாழிசை.)

ஆதியு மிடையினோ டிறுதியு மறிகுவ
தமரரு முனிவரு மரிதுநின் னிலைமையை;
மீதியல் கருடனை விடவர வொடுபகை
விதிமுறை கெடவறம் வெளியுற வருளினை;

(187) வீரசோ. யாப். 11 உரை. [1]நிசைபத்தும்.

தீதியல் புலியது பசிகெடு வகைநின
திருவுரு வருளிய திறமலி பெருமையை;
போதியி னறமலி திருநிழ லதுநனி
பொலிவுற வடியவ ரிடர்கெட வருளினை; (நாலடி அராகம்)

திசைமுகன் மருவிய கமலந னிறமென
வசையறு முனிவொடு [1]மலியு நின்னடி;

உயர்வுறு பெருமையொ டயரா மயர்வொடு
புரையறு நலனொடு [2]பொலியு நின்புகழ்;

(ஈரடியிரண்டாய்வந்த பேரெண்.)

கற்புடை மாரனைக் காய்சினந் தவிர்த்தனை ;
பொற்புடை நாகர்தந் துயரம் போக்கினை ;
மீனுரு வாகி மெய்ம்மையிற் படிந்தனை ;
மானுரு வாகி வான்குண மியற்றினை ;

(ஓரடிநான்காய்வந்த சிற்றெண்)

எண்ணிறந்த குணத்தோய் நீஇ ; [3]யாவர்க்கு மரியோய் நீஇ ;
உண்ணிறைந்த வருளோய் நீஇ; உயர்பார [4]நிறைத்தோய் நீஇ ;
மெய்ப்பொருளை யறிந்தோய் நீஇ ; மெய்யறமிங் களித்தோய் நீஇ ;
செப்பரிய தவத்தோய் நீஇ ; [5]சேர்வார்க்குச் சார்வு நீஇ ;

(முச்சீரினால் வந்த இடையெண்)

நன்மை நீஇ ; தின்மை நீஇ ; நனவு நீஇ ; கனவு நீஇ ;
வன்மை நீஇ ; மென்மை நீஇ ; மதியு நீஇ; விதியு நீஇ ;
இம்மை நீஇ ; மறுமை நீஇ; இரவு நீஇ ; பகலு நீஇ ;
செம்மை நீஇ ; கருமை நீஇ ; சேர்வு நீஇ ; சார்வு நீஇ ;

(இருசீர் பதினாறாய் வந்த அளவெண்)

எனவாங்கு (தனிச்சொல்)

[6]அனக நின்ற னடியிணை பரவுதும்
வெல்படைத் தொண்டைமான் விறற்சே னாபதி
சிங்களத் தரையன் வெண்குடை யதனொடு
பொங்குபுகழ் வில்லவன் புறக்கொடை கண்டு
பொலிதரு சேந்தன் பொன்பற்றி காவலன்
மலிதரு பார்மிசை மன்னுவோ னெனவே. (சுரிதகம்)

---

[1]மலிவுறு. [2]பொலிவுறு. [3]யாவர்க்கும் பெரியோய்நீஇ. [4]முறைத்தோய்நீஇ. [5]சேர்ந்தவர்க்குச் சார்ந்தோய்நீஇ. [6]அலகிலா.

(அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா.)

188. மண்வாழும் பல்லுயிரும் வான்வாழு மிமையவரும்
கண்வாழு மாநாகர் கிளையனைத்துங் களிகூர
அந்தரதுந் துபியியங்க வமரர்க ணடமாட
இந்திரர்பூ மழைபொழிய விமையவர்சா மரையிரட்ட
முத்தநெடுங் குடைநிழற்கீழ் மூரியா சரியணைமேல்
மெய்த்தவர்கள் போற்றிசைப்ப வீற்றிருந்த வொருபெரியோய்!
(தரவு)

எறும்புகடை யயன்முதலா வெண்ணிறந்த வென்றுரைக்கப்
பிறந்திறந்த யோனிதொறும் பிரியாது சூழ்போகி
எவ்வுடம்பி லெவ்வுயிர்க்கும் யாதொன்று லிடரெய்தின்
அவ்வுடம்பி னுயிர்க்குயிரா யருள்பொழியுந் திருவுள்ளம் ;

அறங்கூறு முலகனைத்துங் குளிர்வளர்க்கு மழைமுழக்கின்
திறங்கூற வரைகதிருஞ் செழுங்கமல நனிநாண
ஒருமைக்க ணீரொன்பா னுரைவிரிப்ப வுணர்பொருளால்
அருமைக்கண் மலவின்றி யடைந்ததுநின் றிருவார்த்தை ;

இருட்பார வினைநீக்கி யெவ்வுயிர்க்குங் காவலென
அருட்பாரந் தனிசுமந்த வன்றுமுத லின்றளவும்
மதுவொன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ புண்ணியநின் றிருமேனி ;
(இவை மூன்றுந் தாழிசை)

ஆருயிர்க ளனைத்தினையுங் காப்பதற்கே யருள்பூண்டாய்
ஒருயிர்க்கே யுடம்பளித்தா லொப்புரவிங் கென்னாகும்;
தாமநறுங் குழன்மழைக்கட் டளிரியலார் தம்முன்னர்க்
காமனையே [1]முனைந்துலைத்தாற் கண்ணோட்டம் யாதாங்கொல் ;
(பேரெண்)

போரரக்க ரோரைவர்க் கறவமிழ்தம் பொழிந்தனையே ;
ஆரமிழ்த மணிநாகர் குலமுய்ய வருளினையே ;
வார்சிறைப்புள் ளரையற்கும் வாய்மைநெறி பகர்ந்தனையே ;
பார்மிசை யீரைந்தும் பாவின்றிப் பயிற்றினையே ; (சிற்றெண்)

அருளாழி நயந்தோய் நீஇ ;
அறவாழி பயந்தோய் நீஇ ;
மருளாழி துரந்தோய் நீஇ ;
மறையாழி புரந்தோய் நீஇ ;

---

(188) வீரசோ. யாப். 11 உரை. [1]முனந்தொலைத்தாற்.

மாதவரின் மாதவ னீஇ ;
வானவருள் வானவ னீஇ ;
போதனரிற் போதன னீஇ ;
புண்ணியருட் புண்ணிய னீஇ ; (இடையெண்)

ஆதி நீஇ ; அமல னீஇ ; அயனு நீஇ ; அரியு நீஇ ;
சோதி நீஇ ; நாத னீஇ ; துறைவ னீஇ ; இறைவ னீஇ;
அருளு நீஇ ; பொருளு நீஇ; அறிவ னீஇ; அனக னீஇ ;
தெருளு நீஇ ; திருவு நீஇ ; செறிவு நீஇ ; செம்ம னீஇ ;
(இடையெண்)

எனவாங்கு (தனிச்சொல்)

பவளச் செழுஞ்சுடர் மரகதப் பாசடைப்
பசும்பொன் மாச்சினை விசும்பகம் புதைக்கும்
போதியந் திருநிழற் புனிதநிற் பரவுதும்
மேதகு நந்தி புரிமன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையு முலகிற் சிறந்துவாழ் கெனவே ; (சுரிதகம்)

189. ஆதியங் கடவுளை யருமறை யருகனை
[1]போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
சேதியஞ் செல்வநின் றிருவடி தொழுதனம் ;

காமனைக் கடிந்தனை காலனைக் காய்ந்தனை
தேமலர் மாரியை திருமறு மார்பினை
மாமலர் வண்ணநின் மலரடி வணங்குதும் ;

ஆரருள் பயந்தனை யாழ்துயர் தவிர்த்தனை
ஓரரு ளாழியை யுலகுடை யொருவனை
சீரருண் மொழியைநின் றிருவடி தொழுதனம்.

190. வாடாப் போதி மரகதப் பாசடை
மாநிழ லமர்ந்தோ னெஞ்சம் யார்க்கும்
அருளின் றீங்கே [2]னிறைந்துநனி ஞெகிழ்ந்து
மலரினு மெல்லி தென்ப வதனைக்
காமர் செவ்வி மாரன் மகளிர்
நெடுமா மழைக்கண் விலங்கிமிர்ந் தெடுத்த
வாளும் போழ்ந்தில [3]வாயின்
யாதோ மற்றது [4]மெல்லிய வாறே.

(189) யாப். வி. 15. [1]'போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய' என்ற ஓரடி மிகுதியாகக் கண்டபாடலு முண்டு (ஷை. 52). (190) தொல். பொருளதி. 75, நச்; வீரசோ. பொருட் 19 உரை; [2]னுறைப்பநனி. [3]வாகலின். [4]மேவிய.

191. பாசடைப் போதிப் பேருள் வாமன்
வரையா வீகை போல யாவிரும்
கொடைப்படு வீரக் கொடைவலம் படுமின்
முன்ன மொருமுறைத் தன்னுழை யிரந்த
அன்பி லரக்கர்வேண் டளவும் பருக
என்புதொறுங் கழிப்பித்தன் மெய்திறந்து வாக்கிக்
குருதிக் கொழும்பதங் கொடுத்தது மன்றிக்
[1]கடுந்துயர்ப் பட்ட கள்ளப் புறவின்
மாய யாக்கை [2]சொல்லிய தாற்றன்
[3]உடம்பு நிறுத்துக் கொடுத்தது மன்றி.

192. புனிற்றுப் பசியுழந்த புலிப்பிணவு தனுஅது
மூலமருக் குழவி வாங்கி வாய்ப்படுத்
திரையெனக் கவர்ந்தது நோக்கி யாங்க
வேரிளங் குழவிமுன் சென்று [4]தானக்
கூருகிர் வயமான் புலவுவேட்டுத் தொடங்கிய
வாளெயிற்றுக் கொள்ளையிற் றங்கினன் கதுவப்
பாசிலைப் [5]போதி மேவிய பெருந்தகை
ஆருயிர் காவல் பூண்ட
பேரருட் புணர்ச்சிப் பெருமை தானே.

193. வேத முதல்வ வேதமி லகணித
தத்துவர் தலைவ முத்தி முதல்வ
வழுவா ஞானக் குழுவுடன் வந்து
துன்னுப் பாவ மன்னரை யவித்த
தரும நேமிப் [6]பரமனென வியந்து
துன்னின ராகி மின்னென மிளிர்ந்த
தகைமுடி சாய்த்துச் [7]சத்துவர் வணங்குப
வகைமுடி வல்வினை வாடுக வெனவே.

194. உலும்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோ யுறாமல்
ஆன்றோ னவ்வழித் தோன்றின னதலின்
ஈன்றோ ளேழ்நா ளின்னுயிர் வைத்தாள்.

---

(191) வீரசோ. பொருட் 19 உரை. [1]கருசிமிட். [2]சோலிய, கோலிய. [3]உடம் பறுத்து. (192) ஷி. ஷி: [4]காணக். [5]போதிப்பேருருள் வாமன். (193) யாப். வி. 52: [6]பிரமனென. [7]தத்துவர். (194) விம்பசாரகதை (மணி. பக். 367).

195. முன்றான் பெருமைக்க ணின்றான்முடி வெய்து காறும்
நன்றே நினைந்தான் [1]குணமேமொழிந் தான்ற னக்கென்
றொன்றானு [2]முள்ளான் பிறர்க்கேயுறு திக்கு ழந்தான்
அன்றே யிறைவ னவன்றாள்சர ணங்க ளன்றே.

196. அருணெறியாற் பாரமிதை யாறைந்து முடனடக்கிப்
பொருண்முழுதும் போதியின்கீழ் முழுதுணர்ந்த முனிவரன்றன்
அருண்மொழியா னல்வாய்மை யறிந்தவரே பிறப்பறுப்பார்
மருணெறியாம் பிறநூலு மயக்கறுக்கு மாறுளதோ.

197. கண்கொடுத்தா னடிகொடுத்தான் கயப்புலிக்குத் தற்கொடுத்தான்
பெண்கொடுத்தா னுடம்பினையும் பிளந்திட்டுப் பிறர்க்கீந்தான்
மண்கொடுத்தான் மகக்கொடுத்தான் மன்னுந்தற் சேர்ந்தார்க்கு
விண்கொடுத்தா னவன்கொடுத்த விரித்துரைப்பன் கேளென்றாள்.

198. எண்ணிகந்த காலங்க ளெம்பொருட்டான் மிகவுழன்
றெண்ணிகந்த வுலகங்க ளிருடீர வொருங்குணர்ந்
தெண்ணிகந்த தானமுஞ் சீலமு மிவையாக்கி
யெண்ணிகந்த குணத்தினா னெம்பெருமா னல்லனோ.

199. தோடா ரிலங்கு மலர்கோதி வண்டு
வரிபாட நீடு துணர்சேர்
வாடாத போதி நெறிநீழன் மேய
வாதன் பயந்த வறநூல்
கோடாத சீல [3]வதமேவி வாய்மை
குணனாக நாளு முயல்வார்
வீடாத வின்ப நெறிசேர்வர் துன்ப
வினைசேர்த னாளு மிலரே.

200. எண்டிசையு மாகி யிருளகல நூறி
யெழுதீளிர்கள் சோதி முழுதுலகு நாறி
வண்டிசைகள் பாடி மதுமலர்கள் வேய்ந்து
மழைமருவு போதி யுழைநிழல்கொள் வாமன்
வெண்டிரையின் மீது விரிகதிர்க ளுண
வெறிதழல்கொண் மேனி யறிவனெழின் மேவு
புண்டரிக பாத நமசரண மாகு
மெனமுனிவர் தீமை புணர்பிறவி காணார்.

---

(195) வீரசோ. யாப். 3 உரை: (குண்டலகேசி, கடவுள்வாழ்த்து) [1]குணமொழிந்தான். [2]மில்லான். (196) சித்தாந்தத்தொகை. (197, 198.) நீலகேசி, சமயதிவாகருரை? (199, 200) வீரசோ. யாப். 3, உரை; [3]விதமேவி.

201. அருந்தவர்கட் காதியா யைய நீக்கி
யவ்வியந்தீர்த் தவிரொளிசே ராக்கை யெய்தி
யிருந்திரட்கை யினமருப்பின் யானை யூர்தி
யீரைஞ்ஞூற் றெழிஞட்டத் திமையோ னேத்த
வொருங்குலகி னூல்கற்றோ ரோத முந்நீ
ரொளிவளர வறம்பகர்ந்த வுரவோன் பாதம்
கருங்கயற்கட் காரிகையார் காத னீக்கிக்
கைதொழுதாற் கையகலுங் கவ்வை தானே.

202. வீடுகொண்டநல்லறம்பகர்ந்துமன்பதைக்கெலாம்
விளங்குதிங்கணீர்மையான்விரிந்திலங்குமன்பினோன்
மோடுகொண்டவெண்ணுரைக்கருங்கடற்செழுஞ்சுடர்
முளைத்தெழுந்ததென்னலாய்முகிழ்ந்திலங்கு [1]சோதியான்
நாடுகின்றமூவகைப்பவங்கடந்துகுற்றமா
ன[2]வைந்தடங்கமூன்றறுத்தநாதனுண்மலர்த்துணர்ப்
பீடுகொண்டவார்தளிர்ப்பிறங்குபோதியானையெம்
பிரானைநாளுமேத்துவார்பிறப்பிறப்பிலார்களே.

203. பைங்கண்வாளெயிற்றினப்பகட்டெருத்தின்வள்ளுகிர்ப்
பரூஉத்திரட்குரூஉக்கொடாட்பாலுடைச்செனுவுடைச்
சிங்கவேறுநான்குதாங்கமீதுயர்ந்தசேயொளிச்
சித்திரங்குயிற்றிநாறுசெம்பொனாசனத்தின்மேற்
கொங்குநாறுபோதுசிந்திவானுளோரிறைஞ்சிடக்
கோதிலாவறம்பகர்ந்தமர்ந்தகோன்குளிர்சிழற்
பொங்குதாதுகொப்புளித்துவண்டுபாடுதேமலர்ப்
போதியெம்பிரானடிக்கண்போற்றில்வீடதாகுமே.

204. கூரார் வளையுகிர் வாளெயிற்றுச் செங்கட்
கொலையுழுவை காய்பசியாற் கூர்ந்தவெந்நோய் நீங்க
ஓரா யிரங்கதிர்போல் வாள்விரிந்த மேனி
யுளம்விரும்பிச் சென்றுங் கியைந்தனைநீ யென்றூற்
காரார் திரைமுளைத்த செம்பவள மேவுங்
கடிமுகிழ்த் தண்சினைய காமருபூம் போதி
வாரார் முனிவரர்கள் வானவர்தங் கோவே
யெந்தா யகோவுன்னை யேத்தாதார் யாரே.

(201) யாப். வி. 53. (202-204) வீரசோ. யாப். 3. உரை. [1]போதியின். [2]வைவர்தொடங்கொர்.

(உற்கிருதிச் சந்தம்.)

205. மணியிலகு செறிதளிரொ டலரொளிய நிழலரசின் மருவி யறவோர்
பிணிவிரவு துயரமொடு பிறவிகெட வுரையருளும் பெரிய வருளோன்
துணியிலகு சுடருடைய வரசரொடு பிரமர்தொழு தலைமை யவர்மா
வணியிலகு கமலமல ரனையவெழி லறிவனிணை யடிக டொழுவாம்.

(வேளிவிருத்தம்.)

206. மருளறுத்த பெரும்போதி மாதவரைக் கண்[1]டிலமால்
[2]என்செய்கோம் யாம்
அருளிருந்த திருமொழியா லறவழக்கங் கேட்[1]டிலமால்
[2]என்செய்கோம் யாம்
பொருளறியு மருந்தவத்துப் புரவலரைக் கண்[1]டிலமால்
[2]என்செய்கோம் யாம்.

(சக்கரக்கவி.)

207. மாதவா போதி வரதா வருளமலா
பாதமே யோது சுரரைநீ—தீதகல
மாயா நெறியளிப்பாய் வாரன் பகலாச்சீர்த்
தாயா யலகிலரு டான்

208. விளைவாய போதியை யுறுமளவும் வினைமடியான்
தளர்வின்றி யோடிய தாளினு னல்லனே.

209. அணிதங்கு போதி வாமன்
பணிதங்கு பாத மல்லாற்
றுணிபொன் றிலாத தேவர்
மணிதங்கு பாத மேவார்.

210. போதி நீழற்
சோதி பாதங்
காத லானின்
றோத னன்றே.

மகாபோதி.

211. பொருந்து போதியில்
இருந்த மாதவர்
திருந்து சேவடி
மருந்து மாகுமே.

(205) வீரசோ. யாப். 33-உரை (206) ஷை. 15 உரை [1]டிலனுல், [2]என்செய்கோயான். (207) ஷை அலங்.3.9. (208) நீலகேசி சமய. (மணிமே பக். 368.) (209, 210) வீரசோ. யாப். 33-உரை. (211) ஷை. ஷை. 3-உரை.

212. விண்ணவர் நாயகன் வேண்டக்
கண்ணினி தளித்த காதற்
புண்ணிய னிருந்த போதி
நண்ணிட நோய்நலி யாவே.

துடிதபுரம்.

(உற்கிருதிச்சந்தம்)

213 தொழுமடிய ரிதயமல ரொருபொழுது பிரிவரிய
துணைவ ரெனலாம்
எழுமிரவி கிரணநிக ரிலகுதுகில் புனைசெய்தரு
ளிறைவ ரிடமாம்
குழுவுமறை யவருமுனி வருமரி பிரமருா
கவனு மெவரும்
தொழுதகைய விமையவரு மறமருவு துதிசெய்தெழு
துடித புரமே.

மானவூர்.

214. வானும் பரியாயு மரிண மாயும்
வன்கேழற் களிறுயு மெண்காற் புண்மான்
றானும் பணையெருமை யொருத்த லாயும்
தடக்கையிளங் களிறுயுஞ் சடங்க மாயும்
மீனுயு முயலாயு மன்ன மாயு
மயிலாயும் பிறவாயும் வெல்லுஞ் சிங்க
மானுயுங் கொலைகளவு கட்பொய் காமம்
வரைந்தவர்தா முறைந்தபதி மான வூரே.

215. மிக்கதனங் களைமாரி மூன்றும் பெய்யும்
வெங்களிற்றை மிகுசிந்தா மணியை மேனி
யொக்கவரிந் தொருகூற்றை யிரண்டு கண்ணை
யொளிதிகழுந் திருமுடியை யுடம்பி னூனை
எக்கிவிழுங் குருதிதனை யரசு தன்னை
யின்னுயிர்போற் றேவியையீன் றெடுத்த செல்வ
மக்களைவந் திரந்தவர்க்கு மகிழ்ந்தே யீயும்
வானவர்தா முறைந்தபதி மான வூரே.

---

(212) வீரசோ. யாப், 3 உரை, (213) ஷெ. ஷெ. 33 உரை. (214) நீலகேசி. சமயதிவா, (மணிமே. பக், 60). (215) ஷெ. ஷெ. (மணிமே. பக், 125).

மன்மதன்.

216\. கரும்பேதன் கைச்சிலையுங் காமர் கணையும்
அரும்பே சுரும்பேநா ணென்றூற்—பெரும்பேய்க்
கணத்தானைப் போர்வென்று காரிகையா ரோடும்
மணத்தான மேற்றுவித்தான் வந்து.

217\. யானை யிரதம் பரியா ளிவையில்லை
தானு மனங்கன் றனுக்கரும்பு—தேனர்
[1]மலரைந்தால் வென்று வடுப்படுத்தான் மாரன்
உலகங்கண் மூன்று மொருங்கு.

218\. கலையெலா முதற்கணே கண்டு கொண்டுபெண்
கொலையினுங் கொடுந்தொழில் பூண்டு கோலவெஞ்
சிலையினற் செழுஞ்சரஞ் சேர்த்த செல்வனே
மலையமா ருதத்தொடும் வந்து தோன்றுமே.

ஆன் வாழ்த்து.

219\. நாகின நந்தி யினம்பொலியும் போத்தென
வாய்வா ளுழவர் வளஞ்சிறப்ப வாயர்
அகன்றூர் சுரைய கறந்தபால் சீர்சிறந்த
வான்பொருள் வட்டத் தயிராகு மத்தயிர்
மெல்லக் கடைவிடத்து நெய்தோன்று நெய்பயந்து
நல்லமு தன்ன வளையாகு நல்ல
புனிதமு மெச்சிலு நீக்கித் துனியின்றி
யன்ன பெரும்பயத்த வாகலாற் றென்மரபிற்
காரார் புறவிற் கலித்த புதர்மாந்தி
ஆவா ழியரோ நெடியது.

புகார்ப்பூதம்.

220\. முன்னா ளிந்திரன்......
காவ லழித்துச் சேவல்கொண் டெழுந்த
வேட்கை யமுத மீட்க வெழுவோன்
இந்நகர் காப்போர் யாரென நினைதலும்
நேரிய னெழுந்து நீவரு காறும்

---

(216) வீரசோ. அலங். 12 உரை; (217) ஷை. ஷை. 31 உரை; தண்டி. 77 உரை; இலக், வி. 673. [1]மலரைந்தி னல்வென் றடிப்படுத்தான். (218) யாப். வி. 94. (219) தொல். பொரு. 82 உரை. (220) சிலப். 6, 7—13 உரை.

தார்கெழு மார்ப தாங்கலென் கடனென
உவந்தனன் கேட்டுப் புகழ்ந்தவிப் பூதம்
நின்வழி யாகென நிறீஇப் பெயர்வுழிக்
கடுவிசை யவுணர் கணங்கொண் டீண்டிப்
பொருதுபோர் தொலைந்தன ராகிப் பெரிதழிந்
தாழ்ந்த நெஞ்சிற் சூழ்ந்தனர் நினைந்து
வஞ்ச மன்றிது வஞ்சத் தல்லது
வேற லரிதெனத் தேறினர் தேறி
வளைத்துத் தொடுத்த வல்வா யம்பின்
அயின்முகங் கான்ற வாரிருள் வெயிலோன்
இருகணும் புதையப் பாய்தலி னொருகணும்
நெஞ்சங் காணு நிற்ப நின்ற
வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்.

இரண்டாவது:

அறவியல்.

உறுதிப்பொருள்.

ஔவையார்பாட்டு.

221. ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் [1]கருத்தொத்துற்—றாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

பெறுதற்கருமை.

[ஔவையார் முருகவேள் கேட்கப் பாடிய அகவல்.]

222. அரியது கேட்குந் தனிநெடு வேலோய்
மக்கள் யாக்கையிற் பிறத்தலு மரிதே
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்
மூகையுஞ் செவிடுங் கூனுங் குருடும்
பேடு நீக்கிப் பிறத்தலு மரிதே
பேடு நீக்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நற்குற லரிதே

(221, 222) தமிழ் நா. 30, 57. [1]கருத்தொருமித்.

ஞானமுங் கல்வியு நற்குறு மாயினும்
தானமுந் தவமுந் தரித்தலு மரிதே
தானமுந் தவமுந் தரித்தார்க் கல்லது
வானவர் நாடு வழிதிற வாதே.

223. வினைபல வலியி னாலே வேறுவே றியாக்கை யாகி
நனிபல பிறவி தம்முட் டுன்புறூஉம் பல்லுயிர்க்கு
மனிதரி னரிய தாகுந் தோன்றுத றோன்றி னாலும்
இனியவை நுகர வெய்துஞ் செல்வமு மன்ன தேயாம்.

224. உயர்குடி நனியுட் டோன்ற லூனமி லியாக்கை யாதல்
மயர்வறு கல்வி கேள்வித் தன்மையால் வல்ல ராதல்
பெரிதுணர் வறிவே யாதல் பேரறங் கோட லென்றுங்
கரிதிவை பெறுத லேடா பெற்றவர் மக்க ளென்பார்.

அறஞ்செயல்.

225. எளிதென விகழா தரிதென வுரையாது
நுமக்குநீர் நல்குதி ராயின் மனத்திடை
நினைப்பினும் பிறக்கு மொழியினும் வளரும்
தொழிற்படிற் சினைவிடூஉப் பயக்கு முணர்த்தின்
இவணு மும்பருந் துணையே யதனாற்
றுறைதொறுந் துறைதொறு நோக்கி
யறமே நிறுத்துமி னறிந்திசி னேரே.

ஔவை பாட்டு.

226. ஐய மிடுமி னறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வள வேனுமன்ன மிட்டுண்மின்—தெய்வ
மொருவனே யென்று முணரவல் லீரேல்
அருவினைக ளைந்து மறும்.

தானந் தவஞ் சீலம் பூசனைகள்.

227. மிக்க மாதவம் வீட்டுல கடைதலை விளக்கும்
தக்க தானங்க டணப்பரும் போகத்தைப் பிணிக்கும்
தொக்க சீலங்க ளியக்கமி றறக்கத்தைப் பயக்கும்
சிக்கென் பூசனை திகழொளிப் பிழம்பினைத் திருத்தும்.

(223, 224) வளையாபதி (புறத்.) (225) ஆசிரியமாலை (புறத்).
(227) யாப். வி. 88.

விலக்கியனவொழிதல்.

228. பொய்யன் மின்புறங் கூறன்மின் யாரையும்
வையன் மின்வடி வல்லன சொல்லிநீ
ருய்யன் மின்னுயிர் கொன்றுண்டு வாழுநாள்
செய்யன் மின்சிறி யாரொடு தீயன.

229. கள்ளன் மின்கள வாயின யாவையும்
கொள்ளன் மின்கொலை கூடி வருமறம்
எள்ளன் மின்னில ரென்றெண்ணி யாரையும்
நள்ளன் மின்பிறர் பெண்ணொடு நண்ணன்மின்.

230. சொல்ல லோம்புமின் றோநனி
செல்ல லோம்புமின் றீநெறி
கல்ல லோம்புமின் கைதவம்
மல்லன் ஞாலத்து மாந்தர்காள்.

231. சொல்லல் சொல்லல் தீயவை சொல்லல்—எஞ்ஞான்றும்
புல்லல் புல்லல் தீநெறி புல்லல்—எஞ்ஞான்றும்
கொல்லல் கொல்லல் செய்ந்நலங்கொல்லல்—எஞ்ஞான்றும்
நில்லல் நில்லல் நீசரைச் சார்ந்தங்—கெஞ்ஞான்றும்.

232. நன்மை மேவுவார் மேவுவார் பெரும்பொரு ளுன்கும்
புன்மை மேவுவார் யாவரும் புகழொடு பொருந்தார்
தொன்மை மேவுவார் மேவுவார் தொடர்வருச் சுற்றம்
இன்மை மேவுவார் யாவரு மின்பமொன் றெய்தார்.

அறஞ்செய்தார்.

233. முழங்குகுரன் [1]முரசியம்ப முத்திலங்கு [2]நெடுங்குடைக்கீழ்ப்
பொழிந்தமதக் கருஞ்சுவட்டுப் பொறிமுகத்த களிறூர்ந்து
பெருநிலம் பொதுநீக்கிப் பெயராத பெருமையாற்
பொருகழற்கால் வயவேந்தர் போற்றிசைப்ப வீற்றிருப்பார்
மருள்சேர்ந்த நெறிநீக்கி வாய்மைசால் குணந்தாங்கி
அருள்சேர்ந்த வறம்புரிந்தா ரமர்ந்து.

(228, 229) வளையாபதி (புறத்). (230) யாப். வி. 92. (231) ஷை. 68. (232) வீரசோ. யாப். 17. (233) யாப். வி. 85; [1]முழவியம்ப. [2]வெண் குடைக்கீழ்.

அறஞ்செய்யாதார்.

234 தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டேன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதிக்கட் சுழல்வார் தாமும்
[1]மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலா தாரே.

கற்புடைமகளிர்.

235. நாடு மூரு நணிபுகழ்ந் தேத்தலும்
பீடு றும்மழை பெய்கெனப் பெய்தலும்
கூட லாற்றவர் நல்லது கூறுங்காற்
பாடல் சான்மிகு பத்தினிக் காவதே.

236. தார நல்விதந் தாங்கித் தலைநின்மின்
ஊரு நாடு முவதத லொருதலை
வீர வென்றி விறன்மிகு விண்ணவர்
சீரி னேத்திச் சிறப்பெதிர் கொள்பவே.

கற்பின்மகளிர்.

237. பள்ள முதுநீர்ப் பழகினு மீனினம்
வெள்ளம் புதியது காணின் விருப்புறூஉம்
கள்ளவிழ் கோதையர் காமனொ டாயினும்
உள்ளம் பிறிதா யுருகலுங் கொண்ணி.

238. உண்டியுட் காப்புண் டுறுபொருட் காப்புண்டு
கண்ட விழுப்பொருட் கல்விக்குக் காப்புண்டு
பெண்டிரைக் காப்ப திலமென்று ஞாலத்துக்
கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே.

239. தளிப்பெயற் றண்டுளி தாமரை யின்மேல்
வளிப்பெறு மாத்திரை நின்றற் றொருவன்
அளிப்பவற் காணுஞ் சிறுவரை யல்லாற்
றுளக்கிலர் நில்லார் துணைவளைக் கையார்.

240. எத்துணை யாற்று ளிடுமணை னீர்த்துளி
புற்பனி யுக்க மரத்திலை றண்மயிர்

---

(234) யாப். வி. 94; யாப். கா. ஒழி. 7 மேற்; நன். 415. மயிலை. உரை
[1]மூழ்ந்து. (235-240) வளையாபதி (புறத்).

அத்தனை யும்பிற ரஞ்சொலி ஞர்மனம்
புக்கன மென்று பொதியறைப் பட்டார்.

241. தலைமகனிற் றீர்ந்தொழுக றூன்பிறரிற் சேறல்
நிலைமையி றீப்பெண்டிர்ச் சார்தல்—கலனணிந்து
வேற்றூர் புகுதல் விழாக்காண்ட னோன்பெடுத்தல்
கோற்றொடியார் கோளழியு மாறு.

பிறர்மனை நயவாமை.

242. பெண்ணி னாகிய பேரஞர் பூமியுள்
எண்ண மிக்கவ ரெண்ணினு மெண்ணிலார்
பின்னி நின்ற பெருவினை மேல்வரும்
என்ன தாயினு மேதில்பெண் ணீக்குமின்.

புதல்வரைப் பெறுதல்.

243. பொறையிலா வறிவு போகப் புணர்விலா விளமை மேவத்
துறையிலா வனச வாவி துகிலிலாக் கோலத் தூய்மை
நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னர்ச்
சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வ மன்றே.

அன்புடையார்.

244. நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று [1]முனிவ செய்யார்
அன்பு வேண்டு பவர்.

245. சொல்லுப சொல்லப் பெறுபவே யாதொன்றுஞ்
சொல்லாத சொல்லப் பெறா.

246. எல்லாரு மெந்தமக்கே
நல்லறிவே யுளவென்பார்
நல்லார்க ணனிதெரியிற்
கல்லாருங் கற்றாரும்
சொல்லாலே வெளிப்படுவர்
அதனால்,
மண்மிசை மாண்ட கற்பின்
விண்ணொடு வீடு விளக்குமா லதுவே.

---

(241) தொல். பொரு. 154 நச். (242, 243) வளையாபதி (புறத்). (244) யாப். வி. 15, 66; வீரசோ. யாப். 15 உரை; இலக். வி. 731 உரை; [1]முனிவு செய்யார், முனிவுசொல்லார். (245) யாப். வி. 53, 57; (246) ஷை. 15.